விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 16 புதன்கிழமை (02.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 287

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## முதலமைச்சருக்கு நியமனம் வழங்கினார் ஆளுநர் சந்திரசிறி

### ஆளுநர் அலுவலகத்தில் வைத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைக்கு முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனுக்கு உத்தியோக பூர்வமாக நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அவரது அலுவலகத்தில் வைத்து நியமனக் கடிதம் வழங்கினார். (20ஆம் பக்கம் பார்க்க)



## நாட்டின் அபிவிருத்திக்கு உதவுவதே எனது நோக்கம்

### முதலிடம் பெற்ற தனுராஜ் செவ்வி

(யாழ்ப்பாணம்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 194 புள்ளிகளைப் பெற்று வடக்கு மாகாணத்தில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட யாழ்.ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை மாணவன் பரமானந்தன் தனுராஜ். தான எதிர் காலத்தில் இந்த நாட்டின் அபிவிருததிக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய சிறந்த பொறியிலாளராக வர வேண்டும் என்பதே தனது விருப்பம் என தெரிவித்தார்.



வலம்புரிக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்தார். சர்வதேச சிறுவர் தினமான நேற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிடப்பட்டன.

இதன்படி யாழ. மாவட்டத்திலும் வடகத மாகாணத்திலும முதலிடத்தைப் பெறறுக்கொண்ட மாணவன் தனுராஜ் தனது வெற்றிகுறித்து மேலும் தெரிவிக்கையில், எதிர்காலத்தில் 20ம் பக்கம் பார்க்க

## இன்னும் முடிபு இல்லை முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யார் முன்னிலையில் எப்போது சத்தியப் பிரமாணம் செய்வது என்பது தொடர்பாக இன்னமும் முடிபெடுக்கவில்லை எனத் தெரிவித்தார் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாண சபைக்கு முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ள முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனுக்கான நியமனக் கடிதத்தை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அவரது அலுவலகத்தில் வைத்து நேற்று முற்பகல் 10 மணியளவில் வழங்கினார்.

நியமனக் கடிதத்தைப் பொறுப் பேற்றுக் 19ம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய மாநாட்டிற்கு எதிராக உண்ணாவிரதம்

### சென்னை நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் மாநாட்டிற்கு எதிராக தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தை சேர்ந்த தியாகு என்பவர், வள்ளுவர்கோட்டத்தில் உண்ணாவிரதம் இருக்க அனுமதி அளிக்க வேண்டும் என சென்னை பொலிஸாருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக சென்னை கடற்கரை சாலையில் 20ம் பக்கம் பார்க்க

## அரசு - கூட்டமைப்பு விரைவில் விசேட சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெறவுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வுகளில் பங்கேற்க கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

வட மாகாணசபைத் தேர்தலில் வெற்றியீட்டிய வேட்பாளர்கள் மற்றும் முதலமைச்சர் பதவிப் பிரமாண நிகழ்வின் பின்னர், அரசாங்கத்துடன் முக்கிய சந்திப்பு நடத்தப்படவுள்ளது.

பெரும்பாலும் எதிர்வரும் வார இறுதியில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது. இந்த சந்திப்பு மிகவும தீர்மானமிக்கதாக அமையும் என தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்துடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளைத்தொடர்ந்து, நாடாளுமன்றத் 19ம் பக்கம் பார்க்க

## இன்று கூடுகிறது கூட்டமைப்பு அமைச்சர்கள் தெரிவு முடிபாகும்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் யார் என்பது தொடர்பாக இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தலைமையில் கொழும்பில் இடம்பெறும் கூட்டத்தில் முடிபெடுக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்பீடத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் ஏனைய மாகாண அமைச்சர்கள் தெரிவு இழுபறி நிலையில் உள்ளது.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் இன்று கொழும்பில் இடம்பெறும் கூட்டத்தில் அமைச்சர்கள் யார் என்பது தொடாபில் இறுதி முடிபெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினைப் பெற்று வெற்றிபெற்றது.

இதனால் கிடைக்கப் பெற்ற இரண்டு போனஸ 20ம் பக்கம் பார்க்க

## மகிந்த கல்லூரி மாணவன் தேசிய ரீதியில் முதலிடம்

(கொழும்பு

5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் காலி மஹிந்த கல்லூரியின் மாணவன் சந்தரு தத்சரா 198 புள்ளிகள் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை வெளியாகின. இதன்படி காலி மஹிந்த கல்லூரியின் மாணவன் சந்தரு தத்சரா அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இதேவேளை கொடகம சுபாரதி வத்தியாலயத்தைச் சேர்ந்த கவிநதா கிம்ஹனி, பெலிகலேயா கரகஸ் தலாவ வித்தியாலயத்தைச் சேர்ந்த ஹெஷான் சனுக்க மற்றும் ஹெட்டிமுல்ல பண்டாரநாயக்க ஆரம்ப பாடசாலையைச்சேர்ந்த கிலாணி விதூரங்க ஆகியோர் தலா 196 புள்ளிகளைப்பெற்று அகில 20ம் பக்கம் பார்க்க

## ஏழாலை சைவ சன்மார்க்க மாணவன் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலிடம்



தனுராஜ் மிதுலன் கம்ஷாயினி

(யாழ்ப்பாணம்)

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டன. இதன்படி யாழ். மாவட்டத்தில் ஏழாலை மேற்கு சைவ சன்மாாக்க வித்தியாசாலை மாணவன் பரமானந்தன் தனுராஜ் 194 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தை பெற்றுள்ளதுடன் தமிழ்மொழி மூல மாணவர்களில் அகில இலங்கை ரீதியிலும் முதலிடத்தைப் பெற்றுள்ளான்.

யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவன் முகுந்தன் மிதுலன் 193 புள்ளிகளைப்பெற்று மாவட்ட ரீதியில் இரண்டாம் இடத்தையும் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி உ.கம்ஷாயினி 191 புள்ளிகளைப் பெற்று மாவட்ட நிலையில் 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். (எ-6)


- உணவு, இருப்பிடம், ரிக்கற் இலவசம்.
- 2 வருட விசா.
- படிக்க, உழைக்க சட்ட ஆலோசனைக்கு விரைந்து வாருங்கள்.
- 9 பேருக்கு மட்டுமே அரியவாய்ப்பு.

மிகப் பிந்திய அதிரடி

வெறும் 850000/- ரூபா மட்டும் செலுத்தி ஐரோப்பிய நாடொன்றில் மாதம் 2 இலட்சம் உழைக்கலாம்.



திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(C-4972)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பஸ் பாய்ந்தது பள்ளத்தில்

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் 9 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பண்டாரவளையிலிருந்து வெல்லவாயவிற்கு சென்றுகொண்டிருந்த பஸ்ஸே கொஸ்லாந்தை எனுமிடத்தில் 20 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் காயமடைந்தவர்களில் 8 பேர் கொஸ்லாந்தை வைத்தியசாலையிலும் ஆபத்தான நிலையிலுள்ளவர் தியத்தலாவை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கொஸ்லாந்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## 29 குட்டிகளுடன் நாகபாம்பு மீட்பு

பிபிலை, மடவல வயல் பிரதேசத்திலுள்ள வீட்டு முற்றத்திலிருந்த மரமொன்றில் நாகபாம்புடன் 29 குட்டிகளும், 21 முட்டைகளையும் மீட்டுள்ளதாக வன இலாகா அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிபிலை, மடவல வயல் பிரதேசத்தில் நாமல் விஜேசிறிவர்தன என்பவரின் வீட்டு முற்றத்தில் வீட்டு நிர்மாணப் பணிகளுக்காக வெட்டப்பட்டிருந்த தும்பு மரத்தின் அடிப் பகுதியில் இருந்த புதர் ஒன்றில் பாம்பு ஒன்று அவதானித்ததையடுத்து புதரினை துப்புரவு செய்தபோது சுமார் 5' அடி நீளமுடைய நாக பாம்புடன் 29 குட்டிகளும் அதன் 21 முட்டைகளும் மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

வன பாதுகாப்பு அமைச்சர் விஜித் விஜித முனி சொய்ஸா வன்ஜீவ மாவட்ட அதிகாரிகளுடன் ஸ்தலத்திற்கு விரைந்து நாக பாம்புகளை நில்கல அரச வனப் பகுதியில் விடுவிக்குமாறு பணிப்புரை வழங்கினார். (எ-11)

## சங்கிலி திருட்டு

சைக்கிளில் வந்த இளைஞரினால் பெண்ணொருவருடைய சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி அறுத்து செல்லப்பட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் பிற்பகல் அளவெட்டி தம்பனைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணின் தங்கச்சங்கிலியை சைக்கிளில் வந்த சுமார் இருபது வயது மதிக்கத்தக்க நபரே அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளதாக தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் நேற்று பிற்பகல் முறையிடப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டு சம்பந்தமாக தெல்லிப்பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (எ-11)

# யாழ்.மாநகரசபை ஊழியர்கள் சாகும்வரை உண்ணாவிரதம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையில் தற்காலிகமாக கடமையாற்றி வந்த ஊழியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என கோரி நேற்று சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று காலை 8 மணி முதல் யாழ். மாநகர சபை முன்றலில் சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தற்காலிக ஊழியர்களாக கடமையாற்றி வருவதாகவும், இதுவரை நிரந்தர ஊழியர்களாக உள்வாங்க இல்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரையில் இருந்த இரண்டு ஆணையாளர்களும் எமக்கான நேர்முக தேர்வை நடத்தி இருந்தும் நிரந்தர நியமனத்தை வழங்கவில்லை. ஆனால், தற்போது உள்ள ஆணையாளர் மீண்டும் நேர்முக தேர்வு நடத்தியே எமக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு எமக்கான அடிப்படை கல்வித்தகுதி 8ஆம் ஆண்டாக இருந்தது. தற்போது க.பொ.த. சாதாரண தரம் ஆக்கப்பட்டுள்ளது. இதனால் 300இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பாதிப்படைய உள்ளனர்.

அதேவேளை நேற்று முதல் மாநகர சபையின் பாதுகாப்பு பிரிவினை தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளனர். அதேபோல சுகாதார பொருளியல் பிரிவினையும் தனியாரிடம் ஒப்படைப்பதற்கான கேள்வி கோரல் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

எனவே மூப்பு அடிப்படையில் எமக்கான நிரந்தர நியமனம் கிடைக்கும் வரை சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக ஊழியர்கள் தெரிவித்தனர். (எ-6-5)

## ஒப்பந்த அடிப்படையில் தாயும் மகளும் கொலை

வெல்லவாயப் பகுதியில் குடா ஓயா என்ற இடத்தில் தாயும், மகளும் கொலை செய்யப்பட்டமையானது ஒப்பந்தமொன்றின் அடிப்படையில் இடம்பெற்றமை என விசாரணையின்போது தெரிய வந்துள்ளது.

வெல்லவாயப் பகுதியில் குடா ஓயா என்ற இடத்தில் வீடொன்றிலிருந்து தாயும், மகளும் கடந்த 4 ஆம் திகதி பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இக்கொலைகள் தொடர்பான தீவிர புலனாய்வுகள் மேற்கொண்ட போதிலும் கொலைச் சந்தேக நபர்களை கைது செய்ய முடியாதளவில் சந்தேக நபர்கள் தலைமறைவாகியிருந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றினையடுத்து விரைந்த பொலிஸார் வீடொன்றில் மறைந்திருந்த பெண்ணொருவர் உட்பட நால்வரைக் கைது செய்தனர்.

இவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்ட போதே ஒப்பந்தமொன்றின் அடிப்படையில் குறித்த இரட்டைக் கொலைகள் இடம்பெற்றமை தெரியவந்துள்ளது.

அத்துடன் கைது செய்யப்பட்ட பெண் கொலையுண்டவர்களின் வீட்டையும், அதனைச் சூழவுள்ள காணியையும் தமதாக்கிக் கொள்ளும் வகையில் அவர்களைக் கொலை செய்வதற்கு ஐம்பதாயிரம் ரூபா வைத் தருவதாகக் கூறி கைது செய்யப்பட்டிருக்கும் ஏனைய மூவரிடம் ஒப்பந்தமொன்றினை செய்துள்ளார்.

அவ் ஒப்பந்தத்தின் பேரிலேயே, இவ் இரட்டைக் கொலைகள் இடம்பெற்ற போதிலும், தமக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட ஐம்பதாயிரம் ரூபா பணமும் கிடைக்கவில்லையென்று கைது செய்யப்பட்ட மூவரும் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும், வெல்லவாய மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதுடன் கொலைகள் தொடர்பான பூரண அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படியும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-11)

## மாதா திருச்சொரூபம் மன்னாரில் திருட்டு

(மன்னார்)

மன்னாரில் 178 வருடங்கள் பழைமை வாய்ந்த அடைக்கல மாதா திருச்சொரூபம் ஒன்று திருட்டுப் போயுள்ளதாக முருங்கன் பொலிஸ் நிலையத்தில் ஆலய நிர்வாக சபையினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

மன்னார், நானாட்டான் பகுதியில் அமைந்துள்ள புனித அடைக்கல மாதா ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த 178 வருடங்கள் பழைமை வாய்ந்த அடைக்கல மாதா திருச்சொரூபமே திருட்டுப் போயுள்ளதாக ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கும் 7 மணிக்கும் இடைப்பட்ட வேளையில் குறித்த ஆலயத்திற்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள், கண்ணாடிப் பேழையினுள் வைக்கப்பட்டிருந்த ஒன்றரை அடி உயரம் கொண்ட அடைக்கல மாதா திருச்சொரூபத்தை வெளியில் எடுத்துள்ளதுடன், இந்தச் திருச்சொரூபத்திற்கு போடப்பட்டிருந்த ஆடையை கழற்றி அதே இடத்தில் வைத்துவிட்டு திருச்சொரூபத்தை கொண்டு சென்றுள்ளதாக ஆலய நிர்வாக சபையினர் கூறினர்.

குறித்த ஆலயத்தில் பணி புரிகின்ற ஒருவர், ஆலயத்திற்குச் சென்று பார்த்தபோது மாதா திருச்சொரூபம் அங்கு இல்லாமை தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் ஆலய நிர்வாக சபையினர் கூறினர்.

இந்த நிலையில், முருங்கன் பொலிஸார் நேற்று திங்கட்கிழமை குறித்த ஆலயத்திற்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தடயங்களை கண்டறியும் பொருட்டு மோப்ப நாய் கொண்டு வரப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. (எ-11)

## இறுப்பிட்டி உப தபாலக புதிய கட்டடத் திறப்பு விழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு இறுப்பிட்டி உப தபாலக புதிய கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புங்குடுதீவு தபாலதிபர் திருமதி சுமித்திராவதி தபோதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மற்றும் வட மத்திய மாகாண பிரதித் தபால்மா அதிபர் என்.இரட்ணசிங்கம் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறைப் பேராசிரியர் கா.குகபாலன், வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சி.சிவராசா, யாழ்ப்பாணம் அஞ்சல் அத்தியட்சகர் கா.புஷ்பநாதன், தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்ப்பாண அஞ்சல் வங்கிக் கிளையின் முகாமையாளர் திருமதி ரி.அருளானந்தம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (எ)

## முதியோருக்கு சிறந்த நாடு; இலங்கைக்கு 36 ஆவது இடம்

முதியோருக்கான அதிசிறந்த நாடு என்பதற்கான உலக சுட்டியில் இலங்கை 36 ஆவது இடத்தையும் சுவீடன் முதலாமிடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது. இந்த சுட்டியில் ஆப்கானிஸ்தான் அதிதாழ் நிலையை பெற்றுள்ளது. சுவீடனை தொடர்ந்து நோர்வே, ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் கனடா என்பன இடம்பிடித்துள்ளன.

உலக முதியோர் கவனிப்பு சுட்டியானது இந்த ஆய்வை மேற்கொண்டது. இதன் போது முதியோரின் சமூக பொருளாதார நலன்கள் கவனத்தில் எடுக்கப்பட்டன.

உலகின் அதியுயர் செல்வந்த நாடான அமெரிக்கா எட்டாம் இடத்தில்தான் உள்ளது. ஐக்கிய இராச்சியம் முதல் பத்துக்குள் வரமுடியவில்லை. இலங்கை 36ஆம் இடத்தையும் பலஸ்தீனம் 89ஆம் இடத்தையும் பெற்றுள்ளன.

பொலிவியா மற்றும் மொரீசியஸ் ஆகிய நாடுகள் அவற்றின் பொருளாதாரத்தோடு ஒப்பிடுகையில் உயர் இடத்தை பிடித்துள்ளது. பிரேஸிலும் சீனாவும் உயர் இடத்திலும் இந்தியாவும் ரஷ்யாவும் தாழ்வான இடத்திலும் உள்ளன.

இலங்கையிலுள்ள முதியோர் குடித்தொகை நல்ல அடிப்படை கல்வியிலும் சுகாதாரங்கள் சேவைகளிலும் நன்மை அடைந்து வருகின்றது. இலங்கை முதியோருக்கான அதிசிறந்த நாடு சுட்டி 57.3ஆக காணப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்

- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம் (C-4974)

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அம்மா பிள்ளைகள்

சில பேர் குழந்தைகளிடம் பேசும் போது குழந்தை மாதிரியே பேசுவார்கள். அதாவது மழலை மொழியிலேயே பேசுவார்கள். அப்படிப் பேசினால்தான் குழந்தைக்கு பிடிக்கும்–புரியும்–என்பது இவர்களின் எண்ணம்.

ஆனால் அப்படிப் பேசுவது தவறு என்கிறார்கள் ஆராய்ச்சி யாளர்கள்.

நாம் பேசுவதை பார்த்துத்தானே குழந்தைகள் பேசக் கற்றுக் கொள்ளும். நாமே குழந்தை மாதிரி பேசிக் கொண்டி ருந்தால் அவர்கள் நல்ல விதமாக பேசக் கற்றுக் கொள்வது எப்படி?

இதனால் குழந்தை பேசக் கற்றுக் கொள்ளும் வேகம் தடைப்படும்.

குறித்த 10 குழந்தைகளிடம் உனக்கு அம்மாவைப் பிடிக் குமா? அப்பாவைப் பிடிக்குமா? என்று கேட்டால் அரைவாசிக் குழந்தைகளுக்கு மேல் அம்மாவைப் பிடிக்கும் என்று தான் சொல்லும்.

குழந்தை தாய் வயிற்றில் ஏழு மாதக் குழந்தையாக இருக்கும் போதே அம்மாவின் குரலைக் கேட்குமாம். தாயின் வயிற்றுக்குள் ஒரு சிறிய 'மைக்' வைத்து ஒலிப் பதிவு செய்து பார்த்திருக்கிறார்கள்.

மற்றவர்கள் பேசுவதை விட அம்மா பேசும் குரல் தான் மிகவும் தெளிவாகக் கேட்கிறதாம்.

ஆக ஒரு குழந்தை ஆரம்பத்திலிருந்தே கேட்கும் குரல் அம்மாவின் குரல். அதனால் தான் அம்மா என்றால் ஒரு தனிப்பாசம். தாயின் பேச்சைக் கேட்டுத் தான் வயிற்றில் இருக்கும் குழந்தை பேசக் கற்றுக் கொள்கிறது. பிறக்கும் போதே நமக்கெல்லாம் தாய் மொழிப்பற்று உண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

பிரெஞ்சு மொழி பேசும் ஒரு குடும்பத்தில் ஆராய்ச்சி நடத் தினார்களாம். பிறந்து நான்கு நாட்கள் ஆவதற்குள் குழந்தை ரஷ்ய மொழியை விட பிரெஞ்சு மொழியை விரும்புகிறது என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

எட்டு வயதுக்கு மேல் புதிதாக கற்றுக் கொள்ளும் எந்த மொழியுமே தாய் மொழியை விட கஷ்டமாகத்தான் இருக் குமாம். ஒருகுழந்தை பிறந்து 8 மாதம் ஆனதுமே நாம் பேசும் பேச்சு புரிய ஆரம்பித்து விடும். அதனால் அதன் பின்னரும் சின்னக் குழந்தை மாதிரி உட்கார்ந்து மழலை மொழி பேசிக் கொண்டிருக்காதீர்கள்.

தெளிவாக நல்ல தமிழில் பேசுங்கள். அது புரிந்து கொள்ளும்– கற்றுக் கொள்ளும். அந்த நேரத்திலெல்லாம் நாம் பேசுவதை நாம் பேசுவது மாதிரியே குழந்தை திருப்பிச் சொல்லும். தானே யோசித்துப் பேச 2–3 வருடங்கள் ஆகும்.

ஜான்லாக் என்ற அமெரிக்க விஞ்ஞானி இது பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார். அவர் சொல்கிறார்.

குழந்தை தாயின் வயிற்றில் 7 மாதமாக இருக்கும் பொழுதே பேசக் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கிறது. விரைவாக பேச ஆரம்பிக்கும் குழந்தை புத்திசாலியாக இருக்கும் என்று சிலர் சொல்லுவதுண்டு.

அதுவும் ஒரு பொய்யான நம்பிக்கைதான் என்கிறார் இந்த ஆராய்ச்சியாளர்.

பிறந்த குழந்தைக்கு அப்பாவை விட ஏன் அம்மாவைப் பிடித்திருக்கிறது? என்ற கேள்விக்கு இவருடைய ஆராய்ச்சி விடை சொல்கிறது.

அப்பா குழந்தைகளிடம் கெட்ட பெயர் வாங்குவதற்கு வேறு பல காரணங்களும் உண்டு.

ஒரு அப்பா தன் பிள்ளையைப் பார்த்து "உங்கள் கணக்கு வாத்தியார் 'Home work' கொடுத்திருப்பதாக சொன்னாயே... அதற்கு நான் ஏதாவது உதவி செய்யவா? அந்தக் கணக்கை நான் செய்து காட்டவா?" என்று கேட்டார்.

"வேணாமப்பா! நானே அதை தப்பாக போட்டுக் கொள்கிறேன்" என்றான் பையன்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இலங்கை மீது பொருளாதாரத் தடை விதியுங்கள்-வைகோ ஆவேசம்

இலங்கையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள பாம்பன் பகுதியை சேர்ந்த 35 மீனவர்களை விடுதலை செய்யாது தமிழகமீனவர்கள்மீது இலங்கை அரசு தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்துமாயின் இலங்கை மீது பொருளாதாரத் தடையை விதிப்பதுடன் தூதரக உறவைத் துண்டித்து தமிழக மீனவர்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும் என வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

தமிழக மீனவர்கள் 1984 ஆம் ஆண்டு முதல் இலங்கை கடற்படையினரால் சொல்லொணத் துயரங்களை அனுபவித்து வருகிறார்கள்.

கடந்த 10.11. 1984 அன்று இராமேஸ்வரம் மீனவர் முனியசாமி தொடங்கி இதுவரை 600 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் ஊனமாக்கப்பட்டும் அவர்களின் படகுகளும் மீன்பிடி வலைகளும் முற்றிலும் திட்டமிட்டு சேதமாக்கப்பட்டும் அவர்கள் பிழைக்க வழியின்றி முடக்கப்பட்டுமுள்ளனர்.

இவ்வாறு வருவாய் ஈட்டும் ஆதாரங்களை அழித்து அவர்களை செயலற்றவர்களாக்கிவிட்டது இலங்கை அரசு. மீனவர்களைக் காணாது பதறும் அவர்களின் குடும்பத்தினரின் கண்ணீருக்கும் அவர்கள் தம் பிள்ளைகளின் பரிதவிப்புக்கும் எவரால் ஆறுதல் சொல்ல இயலும்?

இந்த நிலையில் கடந்த 23 ஆம் திகதி புத்தளம் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட பாம்பன் மீனவர்கள் இன்றுவரை தாயகம் திரும்பவில்லை. சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட அவர்கள் கொழும்பு போக்குவரத்து காவலர் குடியிருப்புப் பகுதியில் ஓர் அறையில் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பறிமுதல் செய்யப்பட்ட அவர்களின் நான்கு விசைப் படகுகளையும் மீன்பிடி வலைகளையும் இன்னமும் நீதிமன்ற பொறுப்பிலேயே வைத்துள்ளனர்.

சொந்த நாட்டு மக்களைப் பாதுகாத்து அவர்களின் உடைமைகளை முறையாகப் பாதுகாத்து தாய் நாட்டுக்கு அனுப்ப வேண்டிய கடமையில் இருந்து தவறியிருக்கிறது. இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் இந்திய அரசைப் போலவே அதுவும் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கிறது போலும்.

சுண்டைக்காய் நாடான இலங்கை தமிழக மீனவர்களைத் தாக்குவதையும் கைது செய்வதையும் சிறையில் அடைப்பதையும் அவர்களின்உடைமைகளை சேதப்படுத்துவதையும் தண்டிக்கும் யோக்கியத் தையோ விரட்டி அடிக்கும் துணிச்சலையோ, எந்த நாட்டை எங்கள் சொந்த நாடென்று நினைக்கிறோமோ அந்த இந்திய நாட்டிடம் இல்லை என்பதைச் சொல்வதற்கே அவமான மாக இருக்கிறது.

இந்நிலை மாறிட இந்திய அரசு விரைந்து செயற்பட்டு போர்க்கால அடிப்படையில்சட்டவிரோதமாகக் காவலில் வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் 35 பேரையும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்பில் கொண்டுவந்து உடனடியாக தாயகத்துக்கு அனுப்பிவைக்கவும் அவர்களின் விசைப் படகுகளையும்மீன்பிடிவலைகளையும் நீதிமன்றப் பொறுப்பில் இருந்து பத்திரமாக மீட்டு அவர்களிடம் ஒப்படைக்கவும் விரைந்து முயற்சி மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகிறேன்.

தமிழக மீனவர்கள் மீதான இத் தாக்குதலை இலங்கை அரசு தொடரும் பட்சத்தில் அந்நாட்டின்மீது பொருளாதார தடையை விதித்து தூதரக உறவை யும் துண்டித்து தமிழக மீனவர்களைப்பாதுகாக்க முன் வர வேண்டுமெனவும் இந்திய அரசைவலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். (அ-2)

# இலவச பண்ணிசை வகுப்பு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் இலவச மிருதங்கம்,வயலின்,பண்ணிசை வகுப்புக்களை நடத்தி வருகின்றது. சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும் இவ் வகுப்புக்களில் புதிதாக இணைய விரும்பும் மாணவர்கள் அலுவலக நேரங்களில் பெயர்களைப் பதிவு செய்யலாம். (அ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-140 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 100 |
| தக்காளி | 100 | 60 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 40 |
| கோவா | 50 | 60 | 70 |
| கரட் | 40 | 50 | 60 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 40 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 50-80 | 80 | 80 |
| பாகற்காய் | 50 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 80 |
| பயற்றங்காய் | 20 | 40 | 60 |
| லீக்ஸ் | 70 | 90 | 100 |
| பீற்றூட் | 10 | 20 | 30 |
| கறிமிளகாய் | 40 | 60 | 70 |
| முருங்கைக்காய் | 50 | 40-60 | 120 |
| போஞ்சி | 80 | 90 | 120 |
| கீரை - பிடி | 10 | 20 | 25 |
| தேசிக்காய் | 450 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 35-45 |
| இராசவள்ளி | — | 70 | 120 |

## இராசி பலன்

*02.10.2013*
*(புரட்டாதி 16, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு*
*திரியோதசி முழுவதும்*
*மகம் பிற்பகல் 3.10 மணிவரை*
*இராகுகாலம் 12.02-1.32 மணிவரை*
*சுபநேரம் 4.32-6.02 மணிவரை*
*பிரதோசவிரதம், சித்தாமிர்தம்*

**மேடம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க நினைப்பீர்கள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர்.

**இடபம்** எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், சஞ்சலங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சகோதர வழியில் உதவிகள் கிடை த்து மகிழ்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்** இனிய தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், உங்கள் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வருவர்.

**சிங்கம்** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடும், திடீர் பயணங்கள் உருவாகும், கற்பனை மிகுதியான நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**கன்னி** உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது, உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும், காரிய அலைச்சல்கள் உருவாகும்.

**துலாம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், உறவினர் உங்கள் இல்லம் தேடி வரலாம்,தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**மகரம்** உடல் நலன் சீராக ஒரு தொகையை செலவு செய்யும் நிலை ஏற்படலாம், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், மனச் சஞ்சலங்கள் கூடும்.

**கும்பம்** களஸ்திர நன்மையுண்டு, அபூர்வ சந்திப்புண்டு, பிறர் உதவியுண்டு, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், போசன சுகமுண்டு.

**மீனம்** பிள்ளைகளால் பெருமை உண்டாகும், பிறருக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும், செய்யும் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவை, அளவை கருவிகள் முத்திரையிடப்படவுள்ளன

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகர சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து வியாபார நிலையங்களினதும் வர்த்தகர்களினதும் நிறுவை, அளவைகளை கணிக்கும் கருவிகள் முத்தரை இடப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை பருத்தித்துறை நகர சபையின் செயலாளர் முன்னெடுத்து வருகின்றார்.

நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை பருத்தித்துறைப் பகுதியிலும் மறுநாள் வெள்ளிக்கிழமை நகரசபைப் பிரிவிலும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை பருத்தித்துறை ஆகிய இடங்களில் மூன்று தினங்கள் முத்திரையிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்படி பிரதேச சபைக்குட்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் முத்திரை யிட வேண்டுமென சபையின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9-10)







# இளங்கோ ச.ச.நிலையத்திற்கான 7 இலட்சம் ரூபா கிடைக்கவில்லை

கரணவாய் செல்வாபுரம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இளங்கோ சனசமூக நிலையம் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டுள்ள போதிலும் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட 7 இலட்சம் ரூபா நிதி கிடைக்கப் பெறாமையினால் நிலையத்தை திறந்து வைக்க முடியாதுள்ளதாக நிலையத்தினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இச் சனசமூக நிலையத்திற்கான நிதி தமக்கு கிடைத்ததும் சனசமூக நிலையத்திடம் ஒப்படைப்பதாக கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபையினர் நிலைய நிர்வாகத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

இந்நிதி இன்னமும் கிடைக்காததால் சனசமூக நிலையம் திறந்து வைக்கப்படாத நிலையில் உள்ளது.

இதன் காரரணமாக கிராம மக்கள் மர நிழல்களின் கீழிருந்து பத்திரிகைகளை வாசிக்கும் வருந்தத்தக்க நிலைக்குட்பட்டுள்ளதனால், கட்டப்பட்ட நிலையத்தை விரைவில் திறந்து இயங்க வைப்பதற்கான, நிதியைத் தந்துதவுமாறு சம்பந்தப்பட்டோரிடம் சனசமூக நிலையத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-60)

# உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வருடாந்த உலக குடியிருப்பு தினம் சர்வதேச ரீதியாக ஒக்டோபர் மாதத்தின் முதலாவது திங்கட்கிழமை கொண்டாடப்படுகின்ற நிலையில், தேசிய ரீதியாக இந்நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி மொரட்டுவ நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதற்கமைய, இன்று புதன்கிழமை ஜனசெவன உபகார வீடமைப்பு கடன் திட்டங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட நிரந்தர வருமானம் பெறும் 120 குடும்பங்களுக்கு முதலாம் கட்ட கொடுப்பனவும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத்திட்ட வீடுகளின் உரிமையாளர் 38 பேருக்கு வீடுகளுக்கான உறுதிகளும் வழங்கும் நிகழ்வும் யாழ்.வை.எம்.சி. ஏ மண்டபத்தில் காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அத்துடன், நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் மானிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் உரிமையாளரிடம் கையளிக்கப்படவுள்ளது.

மேலும் இந்நிகழ்வு தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கான அறிவூட்டல் நிகழ்வொன்றையும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார். (அ-9)





வடமாகாண கல்வித்துறை முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் வடமாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. வடமாகாண கல்வி அமைச்சர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.செல்வராசா, கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் உட்பட கலந்து கொண்ட வலயக்கல்விப் பணிப்பாளர்கள், அதிகாரிகள் ஆகியோரைப் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# ஜெயரட்ணம் கிண்ணம் கொக்குவில் இந்து வசம்

மகாஜனாக் கல்லூரி யாழ்.மாவட்ட பாடசாலைகளிடையே நடத்தும் ஜெயரட்ணம் ஞாபகார்த்த துடுப்பாட்ட சுற்றின் அனைத்து போட்டிகளிலும் கொக்குவில் இந்துக் கல்லூரி வெற்றி பெற்று சாதித்துள்ளது. 5 பந்துப் பரிமாற்றங்கள் 8 வீரர்களைக் கொண்ட இச் சுற் றுப் போட்டியில் 8 அணிகள் மோதிக் கொண்டன.

காலிறுதியில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்து களம் இறங்கியது. நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய யூனியன் கல்லூரி அணி 5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 48 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு 49 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி ஒரு இலக்கை மாத்திரம் இழந்து 51 ஓட்டத்தை பெற்று காலிறுதியில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தெரிவாகியது.



அரையிறுதியில் மகாஜனா கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்து கல்லூரி களம் இறங்கியது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய மகாஜனா கல்லூரி அணி 4 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 64 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 4 இலக்குகளை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்று போட்டியில் வெற்றி பெற்று இறு திப் போட்டிக்கு தெரிவாகியது. இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்கொண்ட கொக்குவில் இந்துக் கல்லூரி நாணயச்சுழற்சியில் வென்று முதலில் களம் இறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை இழந்து 56 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு 57 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பெடுத்தாடிய மானிப் பாய் இந்துக் கல்லூரி 5 பந்து பரிமாற்றங்களில்3 இலக்குகளை இழந்து 38 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. இதன் மூலம் 2013 ஆம் ஆண்டின் மகாஜனாவின் ஜெயரட்ணம் கிண்ணத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி கைப்பற்றியுள்ளது. (அ-5-23)

# மகாத்மா காந்தியின் பிறந்த தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி அறிவழிப்போராட்டக் குழுவினால் நடத்தப்படும் ஐ.நாவின் உலக வன்முறையற்ற தினம் மற்றும் மகாத்மா காந்தியின் 144 ஆவது பிறந்த தின நிகழ்வு என்பன இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அறிவழி நிறுவனத் தலைவர் வி.ஸ்ரீசத்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்புரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம் ஆற்றவுள்ளார். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்தை பலப்படுத்துவது தொடர்பில் கிழக்கு சபையில் கூச்சல் குழப்பம்

**அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை பலப்படுத்துவது தொடர்பாக கிழக்கு மாகாண சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவர் ஏ.எம். ஜெமீல் சமர்ப்பித்த பிரேரணைக்கு முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து சபையில் பெரும் அமளி துமளி ஏற்பட்டதுடன் சபை நடவடிக்கையும் ஒத்திவைக்கப்பட்டது.**

கிழக்கு மாகாண சபையின் மாதாந்த சபை அமர்வு அதன் தவிசாளர் ஆரியவதி கலப்பதி தலைமையில் நேற்று இரண்டாவது நாளாக இடம்பெற்றது.

இதன்போது கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவர் ஏ.எம். ஜெமீல், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்த சட்டத்தை பலப்படுத்துவது தொடர்பான தனிநபர் பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றினார்.

13ஆவது திருத்த சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை இல்லாதொழிப்பதற்கு தென்னிலங்கை பேரினவாத அரசியல் தலைமைகளினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளை கிழக்கு மாகாண சபை முறியடிக்க வேண்டும் என்று இதன்போது அவர் வலியுறுத்தினார்.

சிறுபான்மையினரின் நலன்களுக்காக ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையை மேலும் பலப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் இதனை ஒழிப்பதற்கோ அல்லது 13ஆவது திருத்த சட்டத்தில் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களை குறைப்பதற்கோ கிழக்கு மாகாண சபை ஒருபோதும் இடமளிக்கக் கூடாது என்றும் ஜெமீல் கேட்டுக் கொண்டார்.

இவரது இந்த உரையைத் தொடர்ந்து, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் குறித்த பிரேரணைக்கு தனது பலமான எதிர்ப்பை வெளியிட்டார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்த சட்ட விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதால் அது குறித்து இப்போது விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்று முதலமைச்சர் குறிப்பிட்டார்.

அது மாத்திரமல்லாமல் 13 ஆவது திருத்த சட்ட விவகாரம் நீதிமன்றத்தில் இருப்பதால் இந்த சபையில் அது பற்றி விவாதிக்க முடியாது என்று தெரிவித்த முதலமைச்சர், இந்த விவாதத்தை நடத்துவதற்கு தன்னால் அனுமதிக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீதுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவர் ஏ.எம்.ஜெமீலுக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதன்போது ஜெமீலுக்கு ஆதரவாக எதிர்க்கட்சித் தலைவர் தண்டாயுதபாணி உட்பட தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் குரல் எழுப்பினர். அதேவேளை முதலமைச்சருக்கு ஆதரவாக ஆளும் தரப்பு சிங்கள உறுப்பினர்கள் சிலர் கோஷமெழுப்பினர்.

"கிழக்கின் ஆட்சியை இன்றே மாற்றியமைப்போம்" ,"பொம்மை ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவோம்" போன்ற கோஷங்களும் எழுப்பப்பட்டன. இதனால் சபையில் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

இதனையடுத்து, சிறிது நேரத்திற்கு தவிசாளர் ஆரியவதி கலப்பதி சபையை ஒத்திவைத்தார்.

இதேவேளை, இவ்விடயத்தில் எமக்கு அநீதியிழைக்கப்படுமானால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும், முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் ஒன்றிணைந்து புதிய தவிசாளரைத் தெரிவு செய்வோம் என்றும் ஆட்சியை மாற்றியமைப்போம் எனறும் கடும் தொனியில் எச்சரித்தனர்.

இதனைத் தொடர்ந்து முதலமைச்சரும் தவிசாளரும் குறித்த பிரேரணையை விவாதிபதற்கு இணங்கி வந்தனர். அதன் பின்னர் ஒத் திவைக்கப்பட்ட சபை, தவிசாளரினால் மீண்டும் கூட்டப்பட்டு விவாதம் தொடர்ந்து இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## அருணகிரி நாதர் குருபூசை விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்மன் தேவஸ்தானமும் இணைந்து நடத்தும் அருணகிரிநாத சுவாமிக்ள குருபூசை விழா எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்மன் தேவஸ்தான மண்டபத்தில் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்ப்பணா சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி முதுநிலை விரிவுரையாளர் முருகேசு கௌரிநாதன் கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் சைவப்புலவர் சண்முகநாதன் நவநீதன் வழங்கும் அருணகிரிநாதரும் வாழ்வும் என்னும் விடயப்பொருளிலான சொற்பொழிவு இடம்பெறும். (அ-7)

## இன்றைய சிறுவர் துஷ்பிரயோகங்களை நினைத்து மனவேதனை அடைகிறேன்

### முல்லை. மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா

ஆசிரியர்கள் பாடசாலைகளில் மாணவர்களுக்கு பெற்றோர் ஸ்தானத்திலிருந்து கடமை புரிய வேண்டியவர்கள். இப்படி அவர்கள் மாணவர்களுக்கு அன்புடன் வழிகாட்டும் போதுதான் ஒழுக்கமுள்ள ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும் என முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தெரிவித்துள்ளார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் சிறுவர் தினவிழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாணவர்களை அரவணைத்து அன்பு காட்டி ஆதரவுக்கரம் நீட்டி கல்வியை வழங்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு.

இன்று மேற்குலக நாடுகளில் உள்ளது போன்ற செயற்பாடுகள் எங்கள் சமூகத்திலும் புகுந்து வருகின்றன. சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருகின்றன. இவற்றை கட்டுப்படுத்துவதில் சட்டம் ஒருபுறம் தன் கடமையைச் செய்தாலும் ஆசிரியர்களும் அளப்பரிய பங்களிப்பை நல்க முடியும்.

இன்று எங்கள் நீதிமன்றுகளுக்கு வரும் வழக்குகளைக் கண்டு மிகுந்த மனவேதனை அடைகின்றேன். தந்தை மகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட சம்பவங்களும் எங்கள் சமூகத்தில் இடம்பெற்றிருக்கின்றன. இவை மிகுந்த மனவேதனைக்குரியவை.

நாங்கள் சிறுவர்களாக இருந்த காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றது என்பது மிகவும் அரிது. ஆனால் இன்று இவை மெல்ல மெல்ல மேலெழுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதில் ஆசிரியர்களும் பங்களிக்க வேண்டியவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## சிறைச்சாலைகளில் எரிபொருள் விற்பனை மோசடி அம்பலமானது

சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக இடம் பெற்று வரும் எரிபொருள் விற்பனை மோசடி குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

சிறைச்சாலை வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பப்படும் போது இந்த மோசடி இடம் பெற்றுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்கள பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பு நிலைய இயந்திரம் மற்றும் ஊழியர்களின் உதவியுடன் இந்த மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாளாந்தம் சிறைச்சாலை வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பப்படும் போது போலி தரவுகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு குற்றம் உறுதி செய்யப்பட்டு சிறைச்சாலை ஊழியர் ஒருவருக்கு தண்டனையும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் எதிர்வரும் காலங்களில் சிறைச்சாலை வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பும்போது புதிய ய[illegible] சிறைச்சாலைகள் [illegible] தெரிவித்துள்ளது. (அ-2)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து(V)<br>நட்சத்திரம்: சித்திரை 3, 1இல் செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L, கட்டாரில் 5 வருடம் இருந்து வந்துள்ளார்<br>தொ.இ:B2355 | பிறப்பு: 1979 இந்து (PA)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா : 98.5, சூரி, செவ் 1<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியை (அரச)<br>தொ.இ:G2354 |
| பிறப்பு: 1982 இந்து(V)<br>நட்சத்திரம்: சதயம் 4<br>உயரம்: 5'6"<br>கி.பா:11.5<br>தகைமை/தொழில்:BSc Engineer<br>தொ.இ:B2356 | பிறப்பு: 1988 இந்து (V)<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா : 26<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Fisheries, BA (Final)<br>தொ.இ:G2357 |
| பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்: சதயம் 4<br>உயரம்: 5'6"<br>கி.பா : 14<br>தகைமை/தொழில்:QS Following, MSc (UK Student Visa)<br>தொ.இ:B2358 | பிறப்பு: 1988 இந்து (V)<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>கி.பா : 48<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்: CIMA Qualified Accountant<br>தொ.இ:G2361 |
| பிறப்பு: 1980 இந்து (NA)<br>நட்சத்திரம்: பரணி 1<br>உயரம்: 5'8"<br>கி.பா:40.25<br>தகைமை/தொழில்: A/L, UK PR<br>தொ.இ:B2359 | பிறப்பு: 1980 இந்து (செட்டி)<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா : 29.5<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்: HNDA (வரவேற்பாளர், காசாளர்)<br>தொ.இ:G2362 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னணி பெறுபேறுகள்-2013

இவ்வாண்டுக்கான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களை பாடசாலைகளின் அதிபர்கள் அறிவித்துள்ளனர். இதன்படி சித்தியடைந்த மாணவர்களின் விபரம் வருமாறு,

**யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தி.**

ப.தனுராஜ்-194, வி.சௌமியா-181, சு.சுபானுஜா-180, ச.நிக்ஷனா-179, சு.ஸனோஜா-179,சு.நீலக்ஷிகா-178, ஞா. மதுசங்கர்-167, சி.கிருஸ்திகா- 167, சி.குணாளன்- 166, ச.சாம்பவி- 164, அ.பவித்திரா- 164, யோ.ரஜானா- 163, த.இலக்கியன்-160, ம.டிலக்ஷா -160, சி.கஜீபன்- 159, சி.சாருஜன்-158, வி.மிதுஷா- 158, உ.கோஷிகன்- 158, ல.கிறின்சியா- 157, த.இலக்கியா- 156, ஜ.சஞ்சீப்ராஜ்- 155, சி.தக்ஷிகா- 154, க.பனிஸ்ராஜ்- 154

**யாழ்/கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை**

மணிவண்ணன் சர்மிலா(163), றீமான்ஸ் அமிர்தறக்ஷன் (158)

**அருணோதயக் கல்லூரி-அளவெட்டி**

உ.கம்ஷாயினி (மாவட்ட நிலை 3) (191), ம.லட்சிகன் (186), சி.அம்சவர்த்தனா(176), ம.மதுஷா (169), ல.திவியன்(169), உ.சனுஸ்ரன் (166), இ.சங்கீதா (164), தி.கேசிகா (162), து.கவிப்பிரியன் (162), யோ.ஜெசிந்தா (160), இ.ஷதீசன் (160), சி.டேனுஜன் (160), பு.டினோயினி (159), சே.திசாளினி (156), சி.சினேகா (154), ச.அகல்யா (154)

**வெற்றிலைக்கேணி றோ.க.த.க.பாடசாலை**

வின்சன் பெனடிற் லோஜிதன் -173

**கட்டைக்காடு றோ.க.த.க.பாடசாலை**

மைக்கல் மேரி-றெஜினா-154,

**ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை**

பி.சஜிந்தா -164, ஜெ.சதுஷிஜா- 158, த. இளஞ்சுடர் -157

**மருதங்கேணி இ.த.க.பாடசாலை**

தவராசா சங்கவி- 163

**உடுத்துறை இ.ஆ.பாடசாலை**

ஜெயமோகன் நபிகா- 156

**அம்பன் அ.மி.த.க.பாடசாலை**

கேதீஸ்வரன் விபுதா- 165, சிவாஸ்கரலிங்கம் கோபினி-162, புனிதநாதன் சதுர்ஷன்-159

**குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை**

சி.விதுஷிகா- 179

**கிளிநொச்சி மகா வித்தியாலயம்**

யோகலிங்கம் கோபிகா-191 (மா.நி. 01), சிறிதரன் பவித்திரன்- 183, (மா.நி.7), றொபேட்சன் அபினயா -180, குணாநந்தன் அபிஷன்-179, சத்தியமூர்த்தி சுருதி-177, வினோதரன் லோஜிகா -174, இராஜேந்திரன் யுவாயினி-174, விக்னேஸ்வரன் சிபானுகன்-172, நாகலிங்கம் பிரதாபன் -172, உதயகுமார் சுரேனுகா-172, ஜெகதீஸ்வரன் கம்சாஜனி-171, உமாபதீஸ்வரன் ஆனந்தி-169, இராஜநாதன் டிசபத்மன் -169, ரவிதரன் மதுசாளினி-169, சபேஸ் ஜானுகா-165, செல்வராசா ஜெனற்நிருசா-164, டினேந்திரகுமார் சுஸ்மிதா- 164, உதயகுமார் கிஷோப்பிரியன் -164, பரீஸ்வரன் ஜஸ்ரீனா -164, ராஜ்குமார் அபிநயா -163, புஸ்பாகரன் குபேரன்- 163, விமலநாதன் சுஞ்சீதா-163, விமலராஜன் விதுசன் -162, குபேந்திரன் டிலக்ஷனா-162, பாஸ்கரன் எழில்சான் -161, தியாகராஜ் லோசன் -160, முருகமூர்த்தி கஜனிதரன்- 160, சிவநாதச்செல்வன் சஞ் சிகா-159, பத்மராசா கயல்விழி-159, சுரேந் திரன் யதுர்சிகா - 159, சுந்தரலிங்கம் சஞ் சிகா-159, வையகுருநாதன் தாமிரா -158, சோதி ரவி லக்ஷியா -156, விஜயகுமார் பிருந் தியா-155, சுரேஸ்வரன் கவினா -154, பால கிருஷ்ணன் தனுசியா- 154, யோன் கெனடி துவாரகா- 153

**யாழ். மாரீசன்கூடல் றோ.க.த.க.பாடசாலை**

நேசராசா அன்ரனி றொபேட்-166, பவனேஸ்வரன் டிசாந்தன்- 162

# வேம்படி மகளிர் பரிசளிப்பு விழா

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு தினம் இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை தம்பையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி க. பொன்னம்பலம் , சிறப்பு விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவி குருஜிநிதி கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-7)

# சஞ்சீவ மீதான குற்றப்பத்திரம் 2014 ஜனவரியில் வாசிப்பு

சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷவின் கோரிக்கையை கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகேயே நேற்றைய தினம் நிராகரித்தார்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டாரவுக்கு எந்தவொரு பல்கலைக்கழகத்தின் வளாகத்தினுள்ளும் நுழையக்கூடாது என்று விதித்த கட்டளையை நீக்குமாறு சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ நீதிமன்றத்தில் கோரி நின்றார்.

பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கொழும்பு கோட்டை பகுதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியதாக சஞ்சீவ பண்டாரவிற்கு எதிராக கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு நீதிமன்றத்தில் அறிக்கையிட்டிருந்தது.

அவர், அனைத்து பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் செயற்பாட்டு உறுப்பினர் என்பதனால் அவரை பல்கலைக்கழக வளாகத்திற்குள் செல்வதற்கு இடமளிக்குமாறு சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ கோரி நின்றார். அந்த கோரிக்கையை நிராகரித்த நீதவான் பல்கலைக்கழக நிர்வாகம் அழைப்பு விடுத்தால் மட்டுமே பல்கலைக்கழகத்திற்கு செல்லமுடியும் என்று எடுத்துரைத்தார்.

அவர் எந்தவொரு பல்கலைக்கழகத்தினதும் உள்வாரி மாணவர் அல்ல என்பது உறுதிப்படுத்தப்பட்டு நீதிமன்றத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளமையினால் அவரை பல்கலைக்கழகங்களுக்குள் அனுமதியளிக்கும்படி பணிக்கமுடியாது என்றும் நீதவான் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள்' அடங்கிய குற்றப்பத்திரத்தை வாசிப்பதற்காக இந்தவழக்கு 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ-2)

# கழிவுத் தேயிலை மீட்பு

(கொழும்பு)

குருநாகல், மல்லவபிட்டிய பிரதேசத்தில் கழிவு தேயிலை தூளை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த எழுவர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த பிரதேசத்திலுள்ள பாழடைந்த கட்டடத் தொகுதி ஒன்றில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 20 ஆயிரம் கிலோ கழிவு தேயிலைத் தூளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இக்கழிவு தேயிலைத் தூளை 3 லொறிகளில் ஏற்றி விற்பனைக்கு எடுத்துச் செல்வதற்கு சந்தேக நபர்கள் முயற்சித்துள்ளனர்.

இச்சசம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-2)

# டச்வூட் பணிப்பாளர் சபையிலிருந்து துமிந்த சில்வா இராஜினாமா

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான துமிந்த சில்வா டச்வூட் இன்வெஸ்மெண்ட் கம்பனியின் பணிப்பாளர் சபையிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

இதன் காரனமாக கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் இந்த கம்பனியின் பங்குகள் விலை வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

முதலில் 6 ரூபாவரை உயர்ந்து சென்று ரூபா 5.10 என்ற விலையில் சமநிலைக்கு வந்த இந்த பங்கு நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் ரூபா 3.40 ஆக வீழ்ச்சி கண்டுள்ளது.

மேலும் கடந்த ஒரு வாரத்தின் முன்னர் ரூபா 1.70 ம் 1.80 வரை போன பங்குகளின் விலை ஒப்பீட்டளவு உயர்வாக உள்ளதெனலாம்.

துமிந்த சில்வா இந்த கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார் என்ற செய்திகளை அடுத்து பங்குகளின் விலை கடந்த செவ்வாய்க்கிழமை 70 சதவீதத்தால் உயர்ந்திருந்ததாக தெரியவருகின்றது. (அ-2)


உங்கள் முகம், மேனி பளபளக்கவேண்டுமா?
எரிகாயங்களினால் ஏற்பட்ட தழும்புகள் மாறவேண்டுமா?
இன்றே பாவியுங்கள்
'றோயல் ஒலிவ் ஒயில்'
Product of Spain
உணவுத் தேவைகளுக்கு ஏற்ற சுத்தமான ஒலிவ் ஒயில்
ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
Re packed By :
Royal Industries
No.221/1, Adamally Building,
Wolfendhal Street,
Colombo - 12, T.P: 0777277670
அனைத்து பாமசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (சி/4971)





# மரண அறிவித்தல்

## சோமநாதர் கிருஸ்ணராஜா

**(கிராம அலுவலர்)**



தேவதானம் துன்னாலை வடக்கை பிறப்பிடமாகவும் துன்னாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சோமநாதர் கிருஸ்ணராஜா (அல்வாய் வடமேற்கு, மந்திகை கிராமசேவக உத்தியோகத்தர்) திங்கள் 30.09.2013 இல் அகாலமரணமடைந்தார்.

அன்னார் சோமநாதர் காலஞ்சென்ற இலட்சுமியம்மாவின் புதல்வனும் சிவராசா (ஓய்வுநிலை கிராம சேவையாளரும் சமாதான நீதவானும்), குமரதாசன் (ஆசிரியர், யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை), கணநாதன் (வீடமைப்பு உதவி பரிசோதகர்), பத்மநாதன் (தாதிய உத்தியோகத்தர் ஆதாரவைத்தியசாலை, பருத்தித்துறை), ச.புவனேஸ்வரி (ஜேர்மனி), சரவணபவன் (முகாமையாளர், கஜமுகன் பல்பொருள் வாணிபம் - துன்னாலை), சௌ.தேவராணி, வே.யோக ராணி, சி.அருள்ராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும்

ஜெயக்குமாரியின் அன்புக் கணவரும் செ.நிஷாந்தனி, மு.கிருஷாந்தினி, மகாராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வக்குமார் (சுகாதார திணைக்கள சாரதி), முகுந்தன் (மத்திய வங்கி சாரதி) ஆகியோரின் அன்பு மாமனும், நவரத்தினம் தையல் நாயகி ஆகியோரின் மருமகனும் அஸ்வினி, அனோக்சன், அனுராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் புதன் 02.10.2013 இல் 2 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

(சி-4971) **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தொழில்நுட்ப கல்லூரி மீது குண்டுத் தாக்குதல்

மாத்தளையில் அமைந்துள்ள தொழில்நுட்ப கல்லூரி ஒன்றின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மாத்தளை பலபத்வல தொழில்நுட்ப கல்லூரி மீது நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்லூரிக்கு பொறுப்பான அதிகாரியின் இருப்பிடத்தை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும் தாக்குதலில் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை. தாக்குதல் நடத்தப்பட்ட காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-2)

## மாலைதீவுப் பிரஜை கைது

மாலைதீவுப் பிரஜை ஒருவர் பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசா காலாவதியான நிலையிலும் குடிவரவுச் சட்டங்களை மீறிய குற்றச் சாட்டிலுமே இவர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்தேக நபர் நீர்கொழும்பு நீதவான் முன்னிலையில் , ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ-2)

# இலங்கை தொடர்பான எனது நிலைப்பாட்டில் மாற்றமில்லை

## நவநீதம்பிள்ளை மீண்டும் தெரிவிப்பு

**இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் தனது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் இந்த விடயம் குறித்து தான் அதீத கவனத்துடன் செயற்படுவதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை ஆணையர் நவநீதம்பிள்ளை உறுதிபட மீண்டும் தெரிவித்துள்ளார்.**

இலங்கை அரசாங்கமே நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் சிபார்சுகளைக் கூட அந்த நாடு நிறைவேற்றாத நிலைமையே தொடர்ந்தும் காணப்படுகிறது.

தான் மனித உரிமைப் பேரவையில் இறுதியாக தெரிவித்த வாய் மூல அறிக்கை தொடர்பில் இலங்கை அரசு கவனம் செலுத்தி அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்கு முன்னர் அலை நிறைவேற்றப்படல் வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா மனித உரிமைகள் பேரவை அமர்வில் மனித உரிமைகள் முன்னேற்றம் தொடர்பிலான அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள் ளது.

இந்த மீளாய்வு அறிக்கையின் தயாரிப்பு பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்ததாகவும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளருமான கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார். நவிபிள்ளை குறிப்பிட்ட விடயங்களில் அநேகமானவற்றை தாம் ஏற்கனவே பூரணப்படுத்திவிட்டதாகவும் அவற்றில் நடைமுறைப்படுத்த முடியாதவை என்றும் அவர் கூறினார்.

இலங்கை மனித உரிமைகள் விடயத்தில் பொறுப்புக் கூறுதலில் முன்னேற்றத்தை காட்டத் தவறியுள்ளதென மனித உரிமை ஆணையாளர் நவிபிள்ளை ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வில் தெரிவித்தார்.

இலங்கை அடுத்த மார்ச் மாதத்துக்கு முன்னர் அதன் முன்னேற்றத்தை காட்டத் தவறினால் அது ஒரு சர்வதேச விசாரணைக்கு வழிவகுக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

இது விடயமாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கூறுகையில், இலங்கை அரசின் மனித உரிமைகள் மீளாய்வு தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்தற்கான கால எல்லையை நிர்ணயிக்கும் அதிகாரம் மனித உரிமை பேரவை ஆணையர் நாயகம் நவநீதம்பிள்ளைக்கு இல்லை என தெரிவித்துள்ளதோடு அவ்வாறான தொரு காலக் கெடுவை அரசு ஏற்கப் போவதும் இல்லை என்றும் கூறியுள்ளார். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## திருநீற்றுப் பச்சை

Botanical Name- Ocimum Basilicum
Family- Labiatae
Engl- Sweet Basil
Sinh-Suwanda-tata

இது ஒரு சிறிய குத்துச் செடி. சுமார் 50 செ.மீ. வரைக்கும் வளரும். வேரினின்றும் பல உறுதியான சிறிது வழவழப்பான குச்சிகள் தோன்றி சிறிது படர்ந்தாற்போல் வளரும். செடியில் சுணைகள் இல்லை. எதிர் எதிராகவுள்ள இலைகள், நல்ல தடிப்பும், வழவழப்பும், பளபளப்பும் உடையன. இலை 4 X7 செ.மீ.நீளமும் 1.5 முதல் 2.5 செ.மீ. அகலமும் கொண்டது. பூ, காய், நெற்று ஆகியவையுள்ள ஒரே காம்பில் சுமார் 15,20 பூவரிசைகள் அடுக்கடுக்காய் 1/4 , 1/2 அங்குலத்திற்கு ஒன்றாக அமைந்திருக்கும். கிளைக்குச்சிகள் ஒவ்வொன்றும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பூக்காம்போடு



முடிகின்றது. மிகச்சிறிய வெண்ணிறமான பூக்கள் காணப்படும்.ஒரு பக்கம் பெரிய இதழ் ஒன்றும் மற்றொரு பக்கம் சிறிய இதழ் ஒன்று மாக இருக்கின்றன. காம்பின் விதைகள் அதிகம் காணப்படும். இது ஓராண்டுப் பயிர் ஆகும். செடி பூராகவும் நல்ல மணமுடையது.

எல்லா மண்களிலும் பயிராகும். விதைகளை தூவி கன்றுகளை 20 செ.மீற்றருக்கு ஒன்றாக நட்டுப் பயிரிடலாம்.

### மருத்துவப் பயன்கள்

✡ முகத்தில் விஷ (சீழ்) பருக்கள் தோன்றினால் திருநீற்றுப் பச்சிலைகளை கசக்கி சாறெடுத்து அந்தச் சாற்றோடு வசம்பு சேர்த்து அரைத்து விஷப்பருக்கள் மீது தினம் 3 வேளை பூசிவர பருக்கள் காய்ந்து கொட்டி விடும்.

✡ திருநீற்றுப் பச்சிலைகளை கசக்கி சாறு எடுத்து கட்டியின் மேல் பூசிவந்தால் கட்டி அமுக்கி பின் பழுத்துடையும்.

✡ திருநீற்றுப் பச்சை இலை, காம்பு , வேர் இவ்வளவையும் ஒரே அளவாக எடுத்து நன்றாக இடித்து மண்சட்டியில் போட்டு நான்கு மடங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை கொடுக்க சீதளத்தால் ஏற்படும் காய்ச்சல் , சளி, இழுப்பு ஆகிய நோய்கள் குணமாகும்.

#### பீனிசம்/ நீர்க்கோவை

நோய்க்கு மிளகுத் தூளை திருநீற்று பச்சிலைச் சாற்றில் ஊறவைத்து உலர்த்தி (நிழலில் ) பொடி செய்ய வேண்டும். அந்தத் தூளை மூக்குப் பொடியாக போட்டு வந்தால் மண்டைக்குத்து குறைந்து நீரேற்றமும் குணமாகும்.

✡ படர் தாமரைக்கு திருநீற்றுப் பச்சை சாற்றை பூசி வர குணமாகும்.

✡ திருநீற்றுப் பச்சைச் சாற்றை சூடாக்கி 20 மில்லி எடுத்து தேன் 10 மில்லி கலந்து வெறும் வயிற்றில் காலை அருந்த இருமல், ஆஸ்துமா குணமாகும்.

✡ இதன் இலைகளை வாயிலிட்டு மென்று வந்தால் வாய் துர்நாற்றம் நீங்கும்.

✡ குழந்தைகளுக்கு ஏற்படும் மலச்சிக்கலுக்கு இதன் இலைச்சாற்றில் 5-10 மில்லி அளவு வெந்நீருடன் கலந்து கொடுக்கலாம்.

✡ நாட்பட்ட இருமலுக்கு திருநீற்றுப் பச்சை இலை , பூ, மொசுமொசுக்கை , கண்டங்கத்தரி, கருந்துளசி ஆகியவற்றை ஒரே அளவாக எடுத்து 4 மடங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 30 மில்லி அளவு சிறிது தேன் கலந்து காலை மாலை கொடுக்கலாம்.

✡ சிறுநீர் கடுப்பு இருந்தால் திருநீற்றுப் பச்சை , நன்னாரி இரண்டையும் ஒரே அளவாக எடுத்து குடிநீர் காய்ச்சி 30 மில்லி காலை,



மாலை அருந்தலாம்.

✡ திருநீற்றுப் பச்சிலையின் விதைகளைக் கொண்டு தயாரிக்கும் சப்ஜாவிதை பால் சர்பத், கோடைகாலத்தில் உடலுக்குள் ஏற்படும் வெப்பத்தை தணித்து உற்சாகம் ஊட்டும் சத்து மிகுந்த பானமாகும்.

இவ்விதைகளை தண்ணீரில் போட்டு ஊற வைத்தால் சிறிது நேரத்தில் அவை ஒவ்வொன்றும் மிளகளவு உப்பி வெள்ளையாகவும் குழகுழப்பான சதைப்பற்றுடன் தண்ணீரில் மிதக்கும். இவ்வாறு பெறப்பட்ட சப்ஜாவிதைகள் 25 கிராம் 100 கிராம் கற்கண்டை தூள் செய்து பின் சுத்தமான தண்ணீரை 500 மில்லி நிரப்பி வைக்க வேண்டும் .

ஒருமணி நேரத்திற்கு பின்னர் 200 மில்லி சர்பத்தை காய்ச்சிய பசுவின் பால் 200 மில்லியுடன் கலக்க வேண்டும். அதன் பின்பு இதனை அருந்தலாம்.

✡ திருநீற்றுப் பச்சிலை , கற்பூரவள்ளி இலை, மஞ்சள் , கரிசலாங்கண்ணி இலை ஆகிய இவைகள் ஒவ்வொன்றும் 100 கிராம் அளவு எடுத்து இவற்றுடன் சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவை ஒவ்வொன்றும் 20 கிராம் எடுத்து சேர்த்து அம்மியில்வைத்து நன்றாக மைபோல் அரைக்க வேண்டும். மெழுகுபதம் ஆனதும் அதனை 130 மில்லிக் கிராம் மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி ஒரு புட்டியில் அடைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

குளிர்காலத்திலும் ஏனைய காலங் களிலும் சீதளத்தால் தொண்டைக்கட்டு மூக்கடைப்பு ஜலதோஷம் உள்ளவர்களுக்கும் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்படும் தொண் டைச்சதை வளர்ச்சி (Tonsilitis) தினசரி காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் தேனில் உரசிக் கொடுக்கலாம்.

✡ முகப்பருக்களுக்கும் முகம் பளபளப்பாக வருவதற்கும் செவ்விளநீர் தேங்காயில் காய்ச்சிய செவ்விளநீர் எண்ணெய் 350 மில்லியை அடுப்பில் இட்டு சிறு தீயாக எரித்து கொதித்து வரும் சமயம் 70 கிராம் திருநீற்றுப் பச்சிலைகளை போட்டு உடனே இறக்கி ஆறவிட்டு முகத்தில் பூசி வர முகம் பளபளப்பாக வருவதுடன் முகப்பருக்களும் நீங்கும்.

✡ முகத்தில், கழுத்தில் ஏற்படும் கரும்புள்ளிகளுக்கு கசகசாவிதைகள், திருநீற்றுப் பச்சிலைகள் ஒரே அளவாக எடுத்து நிழலில் உலர்த்தி பொடித்து வைத்துக் கொள்ளவும். முகம், கழுத்தினை இளஞ்சூட்டு நீரில் கழுவிய பின்பு இப்பொடியைப் பூசி ஒரு மணி நேரம் ஊற விட்ட பின்பு கழுவி வரவும் .மிகுந்த நறுமணம் உடையதாகவும் இருக்கும்.

✡ பாதி வெற்றிலையுடன் திருநீற்றுப் பச்சிலைகள் 6, தக்கோல விதைகள் 6, கராம்பு-2 சேர்த்து வாயில் போட்டு மென்று வரும் சாற்றை விழுங்கி வர தொண்டை தாவிதம் வாய்த்துர்நாற்றம் நீங்கும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உண்மையான ஊழியன்



ஒருநாள் சக்கரவர்த்தி அக்பர், பீர்பாலுடன் அரண்மனைத் தோட்டத்தில் மெதுவாக உலா வந்து கொண்டிருந்தார். திடீரென அவர் கத்தரிக்காயைப் புகழ ஆரம்பித்தார்.

கத்தரிக்காய் மிகவும் சுவையான காய்கறி, அது உடம்பிற்கும் நல்லதாகும் என அக்பர் கூறினார்.

நீங்கள் சொல்லுவது சரி, பாதுஷாவே! கத்தரிக்காய் மிகவும் சுவையான காய்கறி, கத்தரிக்காயைவிட மிகச் சிறந்த காய்கறி வேறெதுவும் இல்லை என்று பீர்பால் உடனே ஆமோதித்தார்.

ஆஹா! எனக்கு பீர்பாலை சோதிக்க ஒரு சந்தப்பம் கிடைத்துள்ளது என அக்பர் தனக்குள் நினைத்துக்கொண்டார்.



சிறிது நாட்கள் கழித்து, அக்பர் அரண்மனையில் கத்தரிக்காய்களை சமைக்க உத்தரவிட்டார். சமைக்கப்பட்ட கத்தரிக்காயை அரசருக்கு அளித்தபோது அவர் கூறினார். இல்லை எனக்கு வேண்டாம். எனக்குக் கத்தரிக்காய் பிடிக்காது. அவற்றில் விதைகள் நிறைய உள்ளன. மற்றும் அவற்றில் ஒரு சத்தும் இல்லை. இதனை பீர்பாலிடம் கொடுக்கவும் அவருக்குக் கத்தரிக்காய் என்றால் மிகவும் விருப்பம்.

அந்த உணவு பீர்பாலுக்கு அளிக்கப் பட்டது. ஆனால், அவர் தனக்கும் வேண்டாம் எனக் கூறினார்.

எனக்குக் கத்தரிக்காயே பிடிக்காது. நான் அவற்றை வெறுக்கிறேன் என்று அவர் சொன்னார்.

அக்பர் பீர்பால் சொல்வதைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்.

என்ன பீர்பால்? அன்றொருநாள் நீ கத்தரிக்காயைப் புகழ்ந்தாய். கத்தரிக்காயைவிடச் சிறந்த காய்கறி எதுவுமில்லை எனச் சொன்னாயே! எனக் கேட்டார் அக்பர்.

பாதுஷாவே! நான் உங்களுக்குச் சேவகன். கத்தரிக்காய்க்கு அல்ல. நீங்கள் என்னை அமைச்சராக்கியிருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல எனக்கு பரிசுகள் அளிப்பீர்கள். ஆனால், கத்தரிக் யாதே! எனப் பீர்பால் குறிப்பிட்டார்.

பீர்பாலின் புத்திசாலித்தனமான பேச்சு அக்பருக்கு அவர் மீதிருந்த மதிப்பை அதிகரிக்க வைத்தது.

*** *** *** *** *** *** *** ***

## முழு நிலா



ஒருமுறை அக்பர் பீர்பாலையும் அவரது நவரத்தினங்களுள் ஒருவரான அபுல்ஃபசலையும் வேறு ஒருநாட்டிற்கு ஒரு முக்கியமான வேலைக்காக அனுப்பினார்.

பீர்பால் அந்நாட்டு சக்கரவர்த்தியை வணங்கி, அவரது ஆட்சியை முழு நிலவுடன் ஒப்பிட்டார். மேலும் அவர் அக்பரின் ஆட்சியை பிறை நிலவுக்கு ஒப்பிட்டுக் கூறினார்.

இதனைக் கேட்ட அபுல் ஃபசல் அதிர்ச்சியடைந்தார்.

நமது மன்னரை அவர் சிறியவர் எனக் கூற வருகிறாரோ? என கோபத்துடன் நினைத்துக்கொண்டார்.



பிறகு அவர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்பியதும் அபுல்ஃபசல் அக்பரிடம் பீர்பால் கூறியதைச் சொன்னார். இதைக் கேட்ட அக்பர் ஆத்திரத்துடன் பீர்பாலை உடன் வருமாறு ஆணையிட்டார்.

உனது சக்கரவர்த்தியின் ஆட்சி பிறை நிலவு போலும் பக்கத்து நாட்டுச் சக்கரவத்தியின் ஆட்சி முழுநிலவு போலும் உள்ளது அல்லவா? நீ என்ன கூற வருகிறாய் என உடனே விளக்கமளி. எனது அரசவையில் உள்ள திறமையான மனிதன் இவ்வாறு கூறியுள்ளான் என்பதை அறிந்து அதிர்ச்சியடைகிறேன் என்றார் அக்பர்.

அபுல் ஃபசல் அக்பரின் கோபமான முகத்தைக் கண்டு பயந்தார். பீர்பாலுக்கு மரண தண்டனை அளிப்பாரோ? என நினைத்தார்.

ஆனால், பீர்பால் மென்மையாக புன்னகை புரிந்தார்.

பாதுஷாவே! நான் தவறு எதுவும் செய்யவில்லை. நான் இரு நாடுகளையும் ஒப்பிட்டேன். முழுநிலவு என்பது நிலவின் இறுதியான வளர்ச்சி. அதற்குமேல் வளராது. இதன்மூலம் நான் என்ன கூற வருகிறேனென்றால் மற்ற நாடு அதனது முழு வளர்ச்சியை அடைந்துவிட்டது. ஆனால், பிறை நிலவோ, அதன் வளர்ச்சிக்கு ஆரம்பம். அதாவது தங்கள் நாடு இன்னும் பெரிதாகலாம். இப்போது கூறுங்கள் பாதுஷாவே! நான் ஏதாவது தவறாகக் கூறியுள்ளேனா? என பீர்பால் கேட்டார்.

எவ்வளவு புத்திசாலித்தனமாக பீர்பால் பேசியுள்ளார் என்பதை அக்பர் புரிந்து கொண்டார. அவர் புகழ் மழையையும் பரிசு மழையையும் பீர்பால் மீது பொழிந்தார்

** ** ** ** ** ** ** ** ** **




- ❖ 1187-88 ஆண்டுகள் சிலுவைப்போரின் பின்னர் எகிப்திய சுல்தான் சலாதீன் ஜெருசலேமை கைப்பற்றினான்.
- ❖ 1535- ஜாக் கார்ட்டியே மொண்டறியாலைக் கண்டு பிடித்தார்.
- ❖ 1870- ரோம் மீண்டும் இத்தாலியுடன் இணைவதற்கு ஆரதவாக மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்தனர்.
- ❖ 1903- யாழ்ப்பாணத்தில்Jaffna Steam Navigation Company என்ற நிறுவனத்துக்குச் சொந்தமான SS Jaffna என்ற பயணிகள் கப்பல் தனது வெள்ளோட்டத்தை ஆரம்பித்தது.
- ❖ 1935- இத்தாலி அபிசீனியாவைக் கைப்பற்றியது.
- ❖ 1946- பல்கேரியா கம்யூனிஸ்டுகளின் வசமாகியது.
- ❖ 1958- கினி பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- ❖ 1968- மெக்சிக்கோவில் இடம்பெற்ற மாணவர்களின் அமைதிப் போராட்டத்தின் முடிவில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர்.
- ❖ 2006- பென்சில்வேனியாவில் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு நிகழ்வில் 5 மாணவிகள் கொல்லப்பட்டனர்.

**பிறப்புக்கள்**

- ❖ 1800- நாட் டர்னர், அமெரிக்க அடிமைக் கிளர்ச்சித் தலைவர் (இ.1831)
- ❖ 1869- மகாத்மா காந்தி (இ.1948)
- ❖ 1904- லால் பகதூர் சாஸ்திரி, இந்தியப் பிரதமர் (இ.1966)
- ❖ 1925- ஆன் றணசிங்க, ஆங்கிலேய யூதப் பெண் எழுத்தாளர்

**இறப்புக்கள்**

- ❖ 1906- ராஜா ரவி வர்மா, இந்தியாவின் பிரபல ஓவியர் (பி.1848)
- ❖ 1975- காமராஜர், இந்திய அரசியல் தலைவர், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் (பி.1903)

**சிறப்பு நாள்**

இந்தியா - காந்தி ஜெயந்தி

அனைத்துலக வன்முறையற்ற தினம்

### ரவி வர்மா



ராஜா ரவிவர்மா கேரளாவின் திருவிதாங்கூர் சமஸ்தானத்திலுள்ள கிளிமானூர் எனும் ஊரில் 1848 ஆம் ஆண்டு பிறந்தார். சிறுவயதிலிருந்தே சமஸ்கிருதம், மலையாளர் ஆகியவற்றுடன் ஓவியத்தையும் தம்முடைய உறவினர் ராஜா ராஜவர்மாவிடமிருந்து கற்றுக்கொண்டார்.

இவர் திருவாங்கூர் மன்னர் ஆயில்யம் திருநாள் மகாராஜாவின் உதவியுடன் 1862 ஆம் ஆண்டில் திருவனந்தபுரம் அரண்மனையில் எண்ணெய் வண்ண ஓவியக்கலையை அரண்மனை ஓவியர் ராமசாமி நாயுடுவிடம் ஒன்பது ஆண்டுகள் பயின்றார். அவ்வேளையில் அரசகுடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை மணந்துகொண்டார்.

தியோடோர் ஜென்சன் என்னும் ஐரோப்பியர் 1868 இல் அரண்மனை வந்திருந்தபோது அவர் ஓவியம் வரையும் முறையையும் உத்திகளையும் அருகில் இருந்து கவனித்து அதன் மூலம் தாமும் அந்த ஐரோப்பியக் கலையைக் கற்றுக்கொண்டார். அயில்யம் திருநாள் மகாராஜா, ரவிவர்மா தம்மை மிகச் சிறப்பாக வரைந்ததற்காக வீரஸ்ருங்கலா என்னும் உயரிய விருதை அளித்தார்.

1894 ஆம் ஆண்டு முப்பாயில் தமது அச்சகத்தை நிறுவினார். 1896 இல் அவரது அச்சகத்தில் முதல் பிரதி ஓவியம் தமயந்தி அன்னப்பட்சியுடன்உரையாடும் ஓவியம் அச்சிடப்பட்டது. நவம்பர் 24, 2002 இல் டில்லியில் நடந்த ஓவிய ஏலத்தில் இவரது யசோதையும் கிருஷ்ணனும் ஓவியம் 56 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

உலகப் புகழ்பெற்றவர்களின் ஓவியங்களை வரைந்த இவர், 1906 இல் தமது 58 -வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருமத்தில் சிறந்த அண்ணன், தம்பி!



ஆன்மீகம் 131

என்னால் முடிந்தவரை தருமத்தில் மக்களை ஈடுபடுத்தி நன்மை செய்யவே வந்துள்ளேன். உண்மையான சேமிப்பு எது? எங்கு சேர்க்க வேண்டுமோ அங்கே எனக்கு அருள் நிறைந்து கொண்டிருக்கிறது. மெய்ப்பொருளும் சேர்ந்து கொண்டிருக்கிறது. என் பூமாதேவித்தாய் எனக்கு வேண்டிய இடத்தை தேர்ந்தெடுத்துக் கொடுப்பாள். இன்னும் கொஞ்ச காலம் போனால் நிறைய இடங்கள் காலியாக இருக்கும். இதில் ஆட்கள் இருக்கமாட்டார்கள். தென்னிந்தியாவில் மிகப்பெரிய அளவில் பூகம்பம் உண்டு. அது முடிந்த பிறகுதான் ஒரு இடத்தை இறைவன் அமைத்துக் கொடுப்பார். என் இடம் எனக்குத் தெரியும். அந்த இடத்தில் சில சாத்தான்கள் புகுந்து என்னை அங்கு வரவிடாமல்-தருமம் செய்யவிடாமல் தடுக்கிறது என்றேன்.

அதெல்லாம் முடியாது என்று சிங்கப்பூரில் கீழ் தளத்தில் மூன்று பெட்ரூம் உள்ள சொந்த வீட்டை விற்றுவிட்டு புளியஞ்சோனையில் 5 லட்சம் அட்வான்ஸ் கொடுத்து இடம் வாங்கி அருள்பெரும் ஜோதி மகா சித்தர்கள் ஆச்சிரமம் என்ற பெயரில் தொடங்கினார் சிங்கை ராஜா சுவாமிகள்.

அவரது தம்பி சிங்கப்பூர் சீமான் பாபா நடராஜானந்தர் தன் வீட்டை விற்ற பணத்தில் துறையூர் பெருமாள் மலை கும்பாபிஷேக பாலாலயத்தையும் திருநெல்வேலி அ.மி. பாபநாச சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேக பாலாலயத்தையும் செய்தார்.



அண்ணனும் தம்பியும் தமது சொந்த வீட்டை விற்று தெய்வீக திருப்பணி செய்ய முழுமுயற்சியில் ஈடுபடுவது இராம, லட்சுமணர் போல். பார்க்க கண்கொள்ளா காட்சியாக இருக்கிறது. ஏன் சொல்கிறேன் என்றால் என்னைப் பொறுத்தவரை தருமம், தருமம் என்று சென்னால் கதை கேட்கும் கூட்டம் நிறைய உண்டு. அடியேன் இதுவரை ஐம்பது லட்சம் மக்களை சந்தித்து இருந்தாலும் பல இலட்சம் பேர்களுக்கு பல் பொடியும் பல ஆயிரம் பேருக்கு சஞ்சீவி தைலம், லேகியம் கொடுத்தாலும் என்னால் மெய்யான உண்மையாக தரும சிந்தனையுடையவர்களை காண முடியவில்லை.

ஆனால் ஒன்று, அருள்வாக்கு, நாடி, ஜோதிடம், மந்திரஜாலம், வாய்ஜாலம், ஏமாற்றுவித்தை ஆகியனவற்றுடன் பழைய குருடி கதவைத் திறடி என எனக்குத் தெரிந்தவர்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

சித்தர்களோடு தங்கி உணர்ந்து கூறும் உலக ரகசியத்தை காது கொடுத்து கேட்பதற்கோ, உப்பு மூட்டை சேர்க்கவோ இந்த 25 வருடம் வரை யாரும் வரவில்லை.

ஒருவேளை ஈரான், குஜராத், மெக்சிக்கோ போல அனர்த்தங்கள் வந்தால் நினைப்பார்களோ? இல்லை மறப்பார்களோ? எல்லாம் குருவின் செயல். (தொடரும்)

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# சிரியா யுத்தத்தின் நிஜமுகம்!

சிரியா மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துமா இல்லையா என்ற பரபரப்பு ஒருபக்கம் நிலவிக்கொண்டிருக்க, மறுபக்கத்தில் யுத்தம் காரணமாக சிரியாவில் இருந்து வெளியேறி அகதிகளாக உள்ள மக்களின் எண்ணிக்கை, 2 மில்லியன் தொட்டுவிட்டது. சமீபகாலத்தில் உலக அளவில் சொந்த இடங்களில் இருந்து வெளியேறிய அகதிகளின் மிகப்பெரிய எண்ணிக்கை இதுதான்.

இதற்குமுன், 1994 ஆம் ஆண்டு ருவாண்டா நாட்டில் நடந்த இனப் படுகொலைகளின்போது வெளி



யேறிய பெருமளவு அகதிகளின் எண்ணிக்கைக்கு அடுத்தபடியாக உள்ளது சிரியா அகதிகளின் எண்ணிக்கை.

சிரியா தமது அயல்நாடுகளுடன் தரை எல்லையால் இணைக்கப்பட்டு உள்ளதால் இப்படி மில்லியன் கணக்கான அகதிகளால் சிரயாவை விட்டு வெளியேற முடிந்தது. இலங்கையில் யுத்தம் நடந்த காலத்தில் அங்கு நான்கு புறமும் கடல் எல்லைகளாக இருந்ததால் அவர்களால் நாட்டைவிட்டு வெளியேற முடிந்திருக்கவில்லை.

2 மில்லியன் சிரியா அகதிகளை பராமரிக்க, ஐ.நா. அதிகாரிகளுக்கான அமைப்பும் இதர சேவை அமைப்புகளும் திணற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அகதிகளை பராமரிக்க 4.4 பில்லியன் டாலர் நிதி தேவை என கணிப்பிடப்படடுள்ளது. இதுதான் உலக அளவில் இன்றைய திகதி வரை அகதிகள் நிவாரணத்துக்காக தேவைப்படும் அதிகபட்ச தொகை.

யுத்த முனையில் இருந்து உயிர் தப்பி வெளியேறிய அகதிகள், தற்போது எங்கே, உள்ளார்கள்? அவர்கள் வாழ்க்கை முறை எப்படி உள்ளது? ஆயிரம் வார்த்தைகள் கொண்டு விளக்க முடியாது.

சிரியாவில் யுத்தமுனையிலிருந்து அகதியாக சிரியாவை விட்டு வெளியேறிய மக்கள், ஒரே நாட்டுக்குள் செல்லவில்லை. வெவ்வேறு நாட்டு எல்லைகளைக் கடந்து அந்தந்த நாடுகளுக்குள் சென்றுள்ளார்கள். இதுதான், மிகப்பெரிய பிரச்சினை. சில சந்தர்ப்பங்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே வெவ்வேறு நாட்டு எல்லைகளைக் கடந்து வெவ்வேறு நாடுகளில் தங்கியுள்ளார்கள்.



உதாரணமாக சிரியா-துருக்கி எல்லையைக் கடந்து துருக்கியின் தென்கிழக்கே கிலிஸ் நகரிலும் வடக்கு ஈராக்கில் உள்ள குர்திஷ் பகுதிக்குள் நுழைவதற்காக எல்லை அருகே பாலைவனத்திலும் காத்திருக்கிறார்கள்.

பாலைவனத்தைக் கடந்து குர்திஷ் பகுதிக்குள் நுழைந்தால் இவர்களது வாழ்க்கையின் அடுத்த கட்டம் என்ன? இருந்தும் குர்திஷ் பகுதியில் உள்ள அர்பில் என்ற நகரில் சிரியா அகதிகள் தங்கியிருக்கிறார்கள். ஜோர்தான் நகரிலும் மஃப்ராக் அருகே சிரியா அகதிகள் முகாமில் கூடாரங்களில் தங்கியுள்ளார்கள்.

யுத்தம் தொடங்கிய காலத்திலேயே வெளியேறிய அகதிகள் லெபனான் நாட்டுக்குள் சென்று அங்குள்ள செக்கா என்ற நகரில் தமது குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்புகிறார்கள் பெற்றோர். யுத்தம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியவர்களில் சிலர் வெளிநாட்டு வாழ்க்கை ஒத்துக்கொள்ளாமல் நாடு திரும்ப விரும்புவது வழக்கம்.

சிரியாவில் இன்னமும் அபாய நிலை இருக்கையில் அதைப் பொருட்படுத்தாது தமது தாய்நாடு செல்ல முயற்சிக்கின்றனர். ஆனால், சிரியா திரும்பியபின் இவர்களில் எத்தனை பேர் உயிருடன் இருப்பார்களோ!

அகதிகளை வரவேற்கும் அயல் நாடுகளுக்குள் செல்லும் அகதிகளுக்கு பொலிஸ் பிரச்சினை கிடையாது. ஆனால் அகதிகளை வரவேற்காத நாடுகளுக்குள் செல்பவர்களும் உள்ளார்களே!

எனினும் சிரியாவில் இருந்து மசிடோனியா நாட்டுக்குள் சென்று அங்கிருந்து எல்லை வழியாக செர்பியா நாட்டுக்குள் நுழைந்த போது செர்பிய பொலிசிடம் அகப்பட்டுக்கொள்கிறார்களே!

இலங்கையில் நடந்த நீண்டகால யுத்தம் காரணமாக சொந்த இடங்களை விட்டு வெளியேறிய லட்சக் கணக்கான ஈழத்தமிழர்களின் நிலைமைக்கும் இதற்கும் பெரிய வித்தியாசம் கிடையாது.

வாஷிங்டனிலும் டமாஸ்கஸ்ஸிலும் மாஸ்கோவிலும் இருந்து திட்டமிட்டு யுத்தம் நடத்தும் தலைவர்கள் யாருமே இந்த வலியை உணர்ந்திருக்க மாட்டார்கள்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு எதிராக ஷிராணி மனுத்தாக்கல்

(கொழும்பு)

**முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க நகர்வு மனுவொன்றை நேற்றுமுன்தினம் தாக்கல் செய்துள்ளார். இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் நோட்டீஸுக்கு எதிராகவே அவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.**

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளை வழக்கின் பிரதிவாதியான அவருக்கு தெரிவிக்காது, சாட்சிகள் கட்டளைச் சட்டத்தைமீறிவழக்கைவிசாரணைக்கு உட்படுத்துவதற்கு முயற்சிப்பதாக அவர் சார்பில் ஆஜரான ஜனா திபதி சட்டத்தரணி நளீன் லது ஹெட்டி தெரிவித்தார்.

கொழும்பு பிரதான நீதிமன்றத் திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கணனி ஊடான சாட்சிகளை முன்வைப்பதாயின், அது தொடர்பில் 40 நாட்களுக்கு முன்னரே, சாட்சிகளுடன் வழக்கின் பிரதிவாதியின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும் என்றும் அவர் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

சாட்சிகள் கட்டளைச் சட்டத்தில் அவ்வாறே குறிப்பிடப்பட்டிருந்ததாலும் வேறு வழக்குகளில் அவ்வாறு செய்யப்படுவதில்லையென தெரிவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

வாதியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திலான் ரத்நாயக்க, குற்றச்சாட்டுகளை வாசிக்கின்ற போது அவ்வாறு செய்யலாம் என்று எடுத்துரைத்ததுடன், சாட்சிகளின் பிரதியொன்றும் பிரதிவாதிக்கு வழங்கப் பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இடைமறித்த ஜனாதிபதி சட்டத்தரணி நளீன் லதுஹெட்டி பிரதிவாதியின் நகர்வுமனுவின் மூலமாக எடுக்கப்படும் வழக்கில், குற்றச்



சாட்டுகளை வாசிப்பதற்கு இடமில்லை என்று நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

ஜனாதிபதி சட்டத்தரணி நளீன் லது ஹெட்டியினால் முன்வைக்கப் பட்ட காரணங்களுக்கான எதிர்ப்புகளை நவம்பர் 14 ஆம் திகதிக்கு முன்னர் முன்வைக்குமாறு பணித்த பிரதான நீதவான் கிஹான் பில பிட்டி வழக்கையும் அன்றைய தினத்திற்கே ஒத்திவைத்தார்.

ஷிராணி குறித்த சர்வதேச விவாதத்தை நீதவான் ஸ்ரீஸ்கந்த ராஜா, தடுத்து நிறுத்தியதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மேலும் அச்செய்திக் குறிப்பில், முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தொடர்பில் சர்வதேச ரீதியில் நடைபெறவிருந்த விவாதமொன்றை அவர் தடுத்து நிறுத்தியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் நீதவான்கள் வருடாந்தக் கூட்டத்தில் இந்த விடயம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எனினும் இதற்கு அவர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

ஷிராணி பண்டாரநாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டமை குறித்து கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளதாக வெளிநாடொன்றின் பிரதம நீதியரசர் தெரிவித்தபோது, பிரதம நீதியரசர் பணி நீக்கம் செய்யப்பட்டமை அரசியல் அமைப்பிற்கு அமைவானதே என அவர் குறிப் பிட்டுள்ளார்.

பணி நீக்கம் செய்யப்பட்டமை குறித்து இலங்கை நீதிமன்றில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் இந்த நிலையில் விவாதம் நடத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்திருந்தார்.

இதன் காரணமாக ஷிராணி குறித்த விவாதம் இடைநிறுத்தப் பட்டதாக அச் செய்தி குறிப்பில் குறிப் பிடப்பட்டுள்ளது. (அ-2)

# வடக்கில் இராணுவ பிரசன்னம் சிவில் நிர்வாகத்திற்கு இடையூறு

## சம்பந்தன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் இராணுவத்தின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சி மீண்டும் கோரிக்கை விடுத் துள்ளது.

வடக்கில் நிலைநிறுத்தப்பட்டுள்ள படை வீரர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்புவதாக கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் வெற்றியின் பின்னர் இந்திய ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வி ஒன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் அதிகளவில் இராணுவத்தினர் நிலை நிறுத்தப்பட்டுள்ளமை சிவில் நிர்வாக நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் இடையூறாக அமையும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இராணுவத்தின் படை முகாம்களுக்கு வரையறுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தல் காலத்தில் இராணுவத்தினர் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் கூட்டமைப்பு வேட்பாளர் மீதான தாக்குதலை இராணுவத்தினரே நடத்தியிருக்க வேண்டுமென நம்புவதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

வட மாகாண ஆளுநரான சிவிலியன் ஒருவரை நியமிக்க வேண்டியது அவசியமானது எனவும் இது குறித்து ஏற்கனவே ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மாகாண சபை அதிகாரங்களை விட்டுகொடுக்க போவதில்லை

## சுமந்திரன் எம்.பி.விடாப்பிடி

(கொழும்பு)

அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக் வெலவிற்கு போதிய சட்ட அறிவும் விளக்கமும் இல்லையென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

காணி,பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு இல்லையென்று உச்ச நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளதாக தெரிவித்த கருத்திற்கு பதில் தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

சட்டரீதியாக வடமாகாணசபைக்குள்ள அனைத்து அதிகாரங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக் கொள்ளும். சட்டத்தில் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள எந்தவொரு அதிகாரத்தையும் நாங்கள் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்றும் அமைச்சர் கெஹலியவின் கருத்துக்களை பெரிதாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை எனவும் தாம் சட்டத்திற்குள் செயற்படப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித் தார். (அ-2)

# இலங்கைவிடயம் தொடர்பில் குர்ஷித்துடன் பேசினார் மூன்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தும் இலங்கை விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் தலைமைக் காரியாலயத்தில் இச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பில் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

பிராந்திய வலய நாடுகளில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இந்தியாவின் பங்களிப்பு குறித்து பான் கீன் மூன் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை, பங்களாதேஷ், மியன்மார், மாலைதீவு உள்ளிட்ட பிராந்திய வலய நாடுகளின் பிரச்சினைகள் குறித்தும் இந்திய வெளிவிவகார அமைச்சருடன் பான் கீ மூன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதி காக்கும் பணிகளில் இந்தியா வழங்கி வரும் ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது எனவும் பான் கீ மூன் இதன்போது தெரிவித்துள்ளார். (அ-2)

# சென்னை விமான நிலையத்தில் இலங்கையர் நால்வர் கைது

(சென்னை)

போலியான கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கொழும்புக்கு பயணிக்க முயன்ற நான்கு இலங்கையர்கள் சென்னை விமான நிலையத்தில் வைத்து குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்களின் மீது ஏற்பட்ட சந்தேகத்தைத் தொடர்ந்து, அவர்களின் கடவுச் சீட்டுக்களைப் பரிசோதனை செய்த குடிவரவு அதிகாரிகள் அவை போலியானவை என தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை குடிவரவு அதிகாரிகள் நடத்திவருவதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (அ-2)



சுவாமிவிவேகானந்தரின் 150 ஆவது பிறந்த தின நிகழ்வு கரவெட்டி வதிரி வட மத்திய மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சின்மயா மிஷன் சுவாமி சித்ரூபானந்தா விவேகானந்தர் பற்றிய விரிவான நூலை பாடசாலை அதிபர் திருமதி பாலராணி ஸ்ரீதரிடம் வழங்கிய போது....

# மாகாண சபைக்கான வாக்குகளை மீள எண்ணுமாறு ரீட் மனுத்தாக்கல்

வடமேல் மாகாண சபைக்கான வாக்குகளை மீளவும் எண்ணுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரீட் மனுவொன்று தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

ஜனசெத முன்னணியின் தலைவர் வண.பத்தரமுல்லே சீலரத்ன தேரரே இந்த மனுவை தாக்கல் செய் துள்ளார்.

வடமேல் மாகாண சபைக்கான புத்தளம் மாவட்டத்தில் வாக்குகள் எண்ணப்பட்ட போது பல்வேறுபட்ட முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாக அந்த மனுவில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஆகையால் அந்த மாகாண சபைக்கான வாக்குகளை மீளவும் எண்ணும் படி உத்தரவிடுமாறு கோரியே இந்த ரீட் மனு நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த மனுவில் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, உதவி தேர்தல் ஆணையாளர் ஆர்.எம்.ரட்னாயக்க, புத்தளம் மாவட்டச் செயலாளர் எம்.கிங்ஸ்லி பெர்னாண்டோ,தேர்தலில் போட்டியிட்ட கட்சி களின் செயலாளர்கள் ஆகியோர் பிரதிவாதிகளென குறிப் பிடப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்டத்திற்கான வாக்குகளை மீள எண்ணாவிடின், புத்தளம் மாவட்டத்தில் மறு தேர்தல் நடத்துமாறும் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டிருக்கும் உறுப்பினர்களை மறு தேர்தல் நடைபெற்று முடியும் வரை நியமனம் செய்வ தற்கு தடையுத்தரவு பிறப்பிக்குமாறும் தனதுமனுவில்அவர்குறிப்பிட்டுள்ளார்.

வாக்குரிமையை பேணுவது என்பது வெறும் வாக்களிப்பதுடன் நின்று விடுவதில்லை என்றும், வாக்குகளை முறையாக எண்ணி நீதியான முடிவுகள் தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆனி மாதம் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

ஆனியில் பிறந்த நீங்கள் அவசரக்காரர்கள். ஆயினும் தந்திர சாமர்த்தியக்காரர்கள். உள்ளத்தில் இருப்பதை வெளிப்படுத்தாமலேயே பிறர் உள்ளத்தில் இருப்பதை கிரகிக்கும் ஆற்றல் உங்களுக்கு அதிகமாகவே அமைந்திருக்கும். நீங்கள் பல விடயங்களைப் பற்றியும் சிந்திப்பீர்கள். பலவற்றையும் திறமையாகச் செய்து முடிக்கத் துடிப்பீர்கள்.

பல செயல்களில் ஈடுபட்டு நீங்கள் சிலவற்றை அரைகுறையாக விட்டுவிடவும் நேரும். சார்பு நோக்கமின்றி உஷாராகச் சிந்தித்துச் செயற்பட்டால் உங்களுக்கு வெற்றிபெறும் வாய்ப்புக்கள் அடிக்கடி உண்டாகிக் கொண்டிருக்கும். எல்லோரிடமும் சமமாகப் பழகத் தெரிந்த உங்களுக்குப் பலருடைய குற்றங் குறைகளும் பலவீனங்களும் தெள்ளத் தெளிவாக விளங்கிவிடும். மிகவும் ரோஷம் வாய்ந்த உங்களுக்கு பிறர் செய்யும் சிறு தவறும் பெரிய குற்றமாகத் தோன்றும். நீங்கள் தவறிழைத்தாலும் அதற்காகப் பெரிதும் வருந்துவதோடு மிகவும் எரிந்தும் விழுவீர்கள்.

உங்களால் துக்கத்தைத் தாங்கவும் இயலாது. துயரத்தை ஏற்கவும் முடியாது. உடல் உழைப்பு என்றாலே நீங்கள் சோர்வடைவீர்கள். உங்களுக்கு எளிதாக இருக்கும் வகையில் செயல்களைச் சுலபமாக்கிச் சாதகமாக்கிக் கொள்வதில் நீங்கள் நிபுணர்கள்! உங்களுக்கு ஒரு நிலையான இடத்தில் அமர்ந்து எவ்விதக் கடினமான வேலைகளையும் உடலுழைத்துச் செய்யமுடியாது.

ஆயினும் மூளை சம்பந்தப்பட்ட அறிவுநுட்பமான வேலைகளை ஒழுங்காகவும் திறமையாகவும் இருந்த இடத்திலிருந்தே செய்வீர்கள். மேஸ்திரிவேலை, மேற்பார்வை வேலை, சுற்றுப் பிரயாணவேலை, பிரதிநிதிகள் வேலை, கணக்குப் பரிசோதனைத் தொழில், மத்தியஸ்தம் செய்தல், தரகுத் தொழில், மொழி பெயர்ப்புத் தொழில், எழுத்துத் தொழில் முதலிய தொழில்களில் நீங்கள் சிறந்து விளங்கமுடியும். வாக்குச் சாதுரியம், மூளை உழைப்பு இவை இரண்டையும் நம்பியே நீங்கள் தொழிலைச் செய்வீர்கள். சட்ட நுணுக்க ஆய்வு, வேவுபார்த்தல், புள்ளிவிபரங்களைச் சேகரித்தல், பத்திரிகைகளுக்குத் தக்கவாறு துண்டு, துக்கடா செய்திகளைச் சேகரித்தல், விடயங்களைச் சேகரித்து ஒழுங்குபடுத்தல், பிறர் குற்றங்களைச் சொல்லுதல் ஆகிய தொழில்களில் நீங்கள் நிபுணர்களாக விளங்குவீர்கள். ஆனால் உங்கள் போக்கில் பிறர் குறுக்கிடுவதை விரும்பமாட்டீர்கள்.

அப்படி யாராவது குறுக்கிட்டால் வேலையை அப்படியே விட்டு விடுவீர்கள். உங்கள் விருப்பத்திற்கு விட்டுக்கொடுத்தால்தான் செயல்கள் நிறைவேறும். நீங்கள் இலட்சியவாதிகளுமல்ல காரியவாதிகளுமல்ல. சிந்தனைத்தேர்வு வழிப்படியே செயலாற்றும் அறிவியல்வாதிகளே! அதிக பொறுப்புள்ள வேலையைத்தான் நீங்கள் அக்கறையாகத் தேடிக்கொள்வீர்கள்.

உங்களில் பலர் கடன் வாங்குவதற்குப் பெரிதும் அஞ்சுவார்கள். அப்படியே வாங்கினாலும் விரைவில் அந்தக் கடனைக்கொடுத்துவிட முயல்வீர்கள். வட்டி வாங்குவதும் வட்டியைக் கொடுப்பதும் உங்கள் கொள்கைக்கு விரோதமானவை. உங்களுக்குச் சுயசிந்தனைதான் மூலதனம். அதைக்கொண்டு சொந்த வியாபாரம் செய்தால் உங்களுக்கு ஆதாயம் கிடைக்கும். பொருளாதார வாய்ப்பும் அமைந்திருந்தால் பொருள் வளம் மிகவும் பெருகும். வியாபாரம்

## ஜோதிடக் களம்

மற்றவர்களைவிட போட்டியிலும் தன்னிகரில்லாமல் விருத்தி அடைந்து இலாபம் கொழிக்கும்.

உங்கள் வாழ்க்கையில் பல இடங்களையும் சுற்றிப்பார்க்க விரும்புவீர்கள். ஆனியில் பிறந்த சிலர் சிறந்த ஆகாய விமானிகளாகத் திகழ்வதும் உண்டு! உங்களுக்கு மக்களின் நல்லெண்ணத்தையும் தொடர்பையும் பெறுவது கடினமாக இராது. எதையும் சிறப்பாகச் செய்து சாதிக்கக்கூடிய உங்களுக்கு உங்களுடைய சலன சித்தத்தாலும் இரட்டை மனப் பான்மையாலுமே ஏதாவது ஒரு குறிப்பிட்ட செயலில் ஊன்றி ஒருமித்த சிந்தனையுடன் இருப்பது கடினமாகத் தோன்றும். சில சமயங்களில் நீங்கள் மேற்கொண்டுள்ள தொழிலில் அலுப்புச் சலிப்பும் ஏற்படவும் கூடும். பல்வேறு துறைகளில் கவனம் செலுத்தும் உங்களுக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்படவும் கூடும். எனவே அவ்வப்போது ஓய்வு எடுத்துக்கொள்வது உங்கள் உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது என்பதோடு நீங்கள் புதுத்தெம்பும் உற்சாகமும் பெற்று செயலில் ஈடுபடவும் முடியும். எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்தும் துறைகளில் உங்களுக்குள்ள வாய்ப்புக்களை நீங்கள் ஒழுங்குபடுத்திக்கொள்வது அவசியமாகும்.

உலகத்திலுள்ள விடயங்கள் அனைத்தும் உங்களுக்குத் தெரிந்தவை என்றும் தெரியாத விடயமே உலகத்தில் இல்லை என்ற ஒருவிதமான கருத்தும் உங்களிடம் குடிகொண்டிருக்கும்.

ஆனால் உங்களில் பலர் எதையும் முழுமையாகக் கற்றுத்தேர்ந்து அதில் பூரண வல்லமையும் நிபுணத்துவமும் அடைந்திருக்கமாட்டீர்கள். ஆனால், உங்களுக்குத் தெரிந்தவற்றை தெளிவாக உணர்ந்திருப்பீர்கள்.

நீங்கள் பார்வைக்கு அதிமேதாவியாகத் தோன்றினும் உங்களுடைய மேதை அறிவு சில சமயங்களில் உங்கள் சுயதேவைக்கே ஒத்துவராமல் போய்விடுவதும் உண்டு. உங்களது ஆலோசனைகளைக்கேட்டு நடக்கலாம். ஆயினும் உங்களை சகாயத்துக்கு அழைத்துச் செல்லக்கூடாது. ஏனென்றால் நீங்கள் உதவிக்குச் செல்லும்போது தைரியமாகச் செல்வீர்கள்.

நடுவழியில் தயங்கி நழுவ முயல்வதோடு தைரியஸ்தர்களையும் உங்கள் கருத்தைச் சொல்லி கோழையாக்கிவிடும் சுபாவம் உங்களில் பலருக்கு இருக்கும். சலனச் சித்தமும் சுறுசுறுப்பும் புத்தகப் பித்தும் குதர்க்கமாகப் பேசும் வித்தையும் விதண்டாவாதம் செய்வதில் தளராத ஊக்கமும் கொண்ட நீங்கள் ஒரே கல்லில் இரு கனிகளை வீழ்த்தும் அசகாயசூரர்களாகவும் விளங்குவீர்கள்.

நீங்கள் சில பல கெட்ட பழக்கங்களில் ஈடுபட்டு அவற்றால் உங்களுக்கு எந்த விதத் தீங்கும் ஏற்படாது என்று எண்ணிக் கொண்டிருப்பீர்கள்.

அந்தப் பழக்கத்திற்கு அடிமைப்படும் பலவீனத்தை நீங்கள் மாற்றிக்கொள்வது உங்கள் எதிர்கால வாழ்வுக்கு மிகவும் அவசியமாகும். (தொடரும்)



சர்வதேச சிறுவர்தினம் நேற்றைய தினம் கொண்டாடப்பட்ட போது....

# நாடுகள் மீது பொருளாதாரத்தடை விதிப்பது உசிதமானதல்ல

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடுகள் மீது பொருளாதாரத்தடை விதிப்பது உசிதமாகாது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஈரானிய வெளிவிவகார அமைச்சர் முஹமட் ஜாவெட் செரிப்பை சந்தித்தபோதே அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நியூயோர்க்கில் வைத்து இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இதன்போது அவர் தொடர்ந்து கூறுகையில்,

மருந்து போன்ற அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத வகையில் பொருளாதாரத் தடை விதிப்பதனால் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையில் இவ்வாறான தடைகளினால் நாட்டு மக்களே பெரிதும் பாதிக்கப்படுவர் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை நிலைமைகள் குறித்து அமைச்சர் பீரிஸ், ஈரான் அமைச்சருக்கு விளக்கமளித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர் பல்வேறு நல்லிணக்க முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பண வைப்பீடு குறித்த வழக்கு; ரவி எம்.பிக்கு நீதிமன்று அழைப்பு

ரவி கருணாநாயக்கவையும் பிணையாளரையும் எதிர்வரும் 14 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

ஐ.தே.க. எம்.பி.ரவி கருணாநாயக்கவைத் தொடர்ந்தும் நம்ப முடியாதென தெரிவித்து அவரின் பணவைப்பு தொடர்பான பிணையிலிருந்து நீங்கிய பிணையாளரின் சார்பில் பிணை கைச்சாத்திட்ட நபர் தமது சொத்துக்கள் சான்றிதழையும் கிராம சேவகர் சான்றிதழையும் நீதிமன்றில் சமர்ப்பிக்காமை தொடர்பாக காரணங்களைத் தெரிவிப்பதற்கு ரவி கருணாநாயக்கவுக்கும் பிணையாளருக்கும் எதிர்வரும் 14 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்ரமசிங்ஹ இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

ரவி கருணாநாயக்கவின் பிணையாளர் நீங்கிய பின்னர் புதிய பிணையாளராக கடந்த வழக்கு தினத்தன்று நீதிமன்றில் ஒரு இலட்சம் ரூபா பிணைக்கு கைச்சாத்திட்ட முஹம்மட் காமில் ஹஸனுக்கு பிணையாளராக கைச்சாத்திடவுள்ள சொத்துக்கள் என்ன? என்பதை உறுதி செய்யத் தேவையாகும் சொத்துக்கள் சான்றிதழ், வதிவிடத்தை உறுதி செய்யும் கிராமசேவை சான்றிதழ் ஆகியவற்றை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிபதி கடந்த வழக்கு விசாரணையின் போது உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

32 கோடி ரூபா பணத்தை மத்திய வங்கி அனுமதியின்றி தமது கணக்கில் வைப்பீடு செய்ததாகக் கூறி ரவி கருணாநாயக்க உட்பட மூவருக்கு [illegible] க்கை தாக்கல் செய்திருந்தார். (அ-2)

# இலங்கையின் மதச் சுதந்திரம் தொடர்பில் கனடா கவலை

(கொழும்பு)

இலங்கையின் மதச் சுதந்திரம் குறித்து கனடா கவலை வெளியிட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் 68 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கிறிஸ்தவ தேவாலயங்கள், இஸ்லாமிய பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதுடன் முஸ்லிம் அரசியல்வாதி அசாத் சாலியும் கைது செய்யப்பட்டதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் மதம்சார் விடய த்தில் போதியளவு முன்னேற்றம் ஏற்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் கொள்கைகள், கோட்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியது அவசியமானது எனஅவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வுகளில் தமது உயர்மட்டக்குழு பங்கேற்காது என கனேடிய அமைச்சர் ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் ஞானச்சுடர் மாத சஞ்சிகையின் புரட்டாதி மாதத்துக்கான வெளியீடு வெளிவந்துள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நெருக்கடியில் சர்வதேச சமூகம்!

2004 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றி மோசடியானது என்ற சர்வதேச சமூகத்தினது அப்போதைய முடிபு தவறானது என்ற உண்மை இப்போது வெளிப்படையாகியுள்ளது. அதாவது விடுதலைப்புலிகளால் தான் கூட்டமைப்பு வெற்றிபெற்றது என்ற கருத்து உடைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த காலத்துக்கும், விடுதலைப்புலிகளின் ஆதிக்கம் இல்லாத காலத்துக்கும் இடையில் தமிழ் மக்களின் வாக்களிப்பு பாரம்பரியத்தில் மாற்றம் நிகழவில்லை. அதேவேளை, தமிழ் மக்கள் அரசாங்கத்தை நிராகரித்து, அரசாங்கத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளை நிராகரித்து, தமக்கான உரிமையே முக்கியமானது என்று தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளனர். இது, போருக்குப் பிந்திய சூழலில் அரசியல்தீர்வு ஒன்றே முக்கியமானதும் முதன்மையானதும் என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளது.

வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்கள் அளித்துள்ள பேராதரவு, உலகத்தையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. உலக ஊடகங்கள் அனைத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றியை பிரமிப்போடு பார்க்கின்றன. ஜனநாயக ரீதியாக தமிழ் மக்கள் வெளிப்படுத்தியுள்ள அரசியல் அபிலாசைகளை உலக நாடுகள், அதிர்ச்சியோடும் ஆச்சரியத்தோடும் நோக்குகின்றன. ஏனென்றால் சர்வதேச சமூகத்துக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் முக்கியமான செய்தியை எடுத்துக் கூறியுள்ளன.

சர்வதேச சமூகத்தினமும் ஊடகங்களினதும் முன்னைய நிலைப்பாடுகளை, மறுபரிசீலனை செய்துகொள்ளவும் சுயபரிசோதனை செய்துகொள்ளவும் இந்த தேர்தல் முடிவுகள் அழுத்தம் கொடுத்துள்ளன.

தமிழ் மக்களின் நியாயமான உரிமை கோரிய போராட்டத்துக்கு ஒரு கட்டத்தில் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டதற்கு தாமும் பொறுப்பு என்ற உள்ளார்ந்த குற்றவுணர்ச்சியில் உலகமே கூனிக்குறுக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அந்த ஒரு தலைப்பட்சமான முடிவே தமிழர்களைப் பேரழிவுகளுக்குள் தள்ளிவிட்டது. இந்த வரலாற்று அவப்பழியில் இருந்து ஒருபோதும் சர்வதேச சமூகத்தினால் விடுபட முடியாது.

கடந்த வாரம் ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றிய ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன், இலங்கையில் போரின் இறுதிக் கட்டத்தில் ஐ.நா. தவறுகளை இழைத்துவிட்டது என்று பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருந்தார். உள்ளக விசாரணைகளின் முடிவில் ஐ.நா. இந்த முடிவுக்கு வந்துள்ளது. அதுபோலவே போருக்குத் துணை நின்ற நாடுகள், இப்போது தாம் தவறு செய்துவிட்டதாக உணரும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது தவறுகளை அவர்கள் உணர்வதால் முள்ளிவாய்க்காலில் தமிழர்கள் இழந்தவை எதுவும் மீளக் கிடைக்கப்போவதில்லை. அழிவுகளின் மீதும் இழப்புகளின் மீதும் நிமிர்ந்தெழ வேண்டிய நிலையில் உள்ள தமிழ் மக்கள் இந்தத் தேர்தல் மூலம் சர்வதேசத்துக்கு ஒரு தெளிவான செய்தியை அளித்துள்ளார்கள். தமது தாயகப் பகுதியில் தம்மைத் தாமே ஆளும் வகையில் சுதந்திரமாக- நிம்மதியாக வாழ்வதற்கான எதிர்பார்ப்பை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழ் மக்கள் இத்தகைய முடிவை உலகிற்கு வெளிப்படுத்தியது இதுதான் முதற்தடவையல்ல. 1977 ஆம் ஆண்டு தேர்தலில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதும் ஆதரவாக வாக்களித்தனர். ஆனால், அப்போது தமிழர் விவகாரம் சர்வதேச மயமாக்கப்படவில்லை.

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில்கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக வாக்களித்து தமிழ் மக்கள் தமது விருப்பினை வெளிப்படுத்தினர். ஆனால், அதனை சர்வதேச சமூகம் வேறுவிதமாகப் பார்த்தது. விடுதலைப்புலிகளின் மூலம் அடையப்பட்ட வெற்றியாகவே அதனை இலங்கை அரசு பிரச்சாரப்படுத்தியது. சர்வதேச சமூகமும் அவ்வாறே தவறாக எடைபோட்டது.

2004 நாடாளுமன்றத் தேர்தலில் கிளிநொச்சியை உள்ளடக்கிய யாழ்.மாவட்டத்தில் 257,320 வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றிருந்தது. இப்போதும் கிளிநொச்சி, யாழ். மாவட்டங்களில் சுமார் இரண்டரை இலட்சம் வாக்குகளையே கூட்டமைப்பு பெற்றுள்ளது. இவையிரண்டுக்கும் இடையில் பெரும் வித்தியாசம் இல்லை.

எனவே, 2004 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றி மோசடியானது என்ற சர்வதேச சமூகத்தினது அப்போதைய முடிவு தவறானது என்ற உண்மை இப்போது வெளிப்படையாகியுள்ளது.



போர் முடிவுக்கு வந்தவுடன் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் மத்தியில் போரினால் ஏற்பட்ட காயங்களை, அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் ஆற்றுவதற்கு முற்பட்டு. அதற்கு உலக நாடுகள் பலவும் துணை நிற்கவும் தவறவில்லை. அனைத்து நாடுகளுமே அதற்கு ஆதரவாக நின்றன. பல நாடுகள் அனுதாபப்பட்டு கொடுத்த உதவிகளை இலங்கை அரசாங்கம் தனக்கு சாதகமான சூழலை உருவாக்குவதற்காக பயன்படுத்திக் கொண்டது.

ஆனால், மாகாணசபைத் தேர்தல் முடிவு, இந்த நாடுகளுக்கு உதவிகளுக்கு முன்னர் உரிமைகள்தான் முக்கியம் என்ற உண்மையை உறுதிப்படுத்தியுள்ளது. இதனால் சர்வதேச சமூகத்துக்கு புதிய நெருக்கடி உருவாகியுள்ளது. இதுவரை இலங்கை அரசாங்கத்தை மனித உரிமைகள் விவகாரத்தை மட்டும் வைத்துக்கொண்டு அழுத்தம் கொடுத்து வந்த நாடுகள், இறுதித் தீர்வுக்கான அழுத்தத்தை அதிகரிக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளன.

மாகாணசபைத் தேர்தல் முடிவு வெளியானதும் இந்தியா, வெளியிட்ட அறிக்கையில் 13-வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் படியும் அதற்கு அப்பால் செல்லும் படியும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவும் அரசியல் தீர்வுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. நவநீதம்பிள்ளையின் அறிக்கையிலும் இது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதைவிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் வடக்கு மாகாணசபையுடனும் இலங்கை அரசாங்கம் இணங்கிச் செயற்பட வேண்டும் என்று எல்லா நாடுகளும் அமைப்புகளும் வலியுறுத்திக் கூறியுள்ளன.

மாகாணசபைத் தேர்தலில் தமிழ்மக்கள் ஜனநாயக ரீதியாக வெளிப்படுத்தியுள்ள கருத்தை, இலங்கை அரசாங்கத்தினாலோ சர்வதேச சமுதாயத்தினாலோ நிராகரிக்க முடியாது. இதனால் நிரந்தர அரசியல் தீர்வை நோக்கி இலங்கையை நகர்த்திச் செல்ல வேண்டிய நிலை சர்வதேச சமூகத்துக்கு ஏற்பட்டுள்ளது.

போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வைப்பதையே, போருக்குத் துணை நின்றதற்காக தாம் செய்ய வேண்டிய பிராய்ச்சித்தமாக பலநாடுகள் கருதிக் கொண்டிருந்தன.

இப்போது அதற்கும் அப்பால் தவறான தமது முடிவுகளுக்காக நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் உள்ளது என்பது அந்த நாடுகளுக்கு உணர்த்தப்பட்டுள்ளது.

இது தமிழர் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைப் பெறுவதற்கான கதவுகளை அகலத் திறந்துவிட்டுள்ளது. ஏனென்றால் இப்போது தமிழ் மக்களின் கருத்தை சர்வதேச சமூகம் நன்றாக அறிந்து கொண்டுள்ளது.

தமிழ் மக்களின் நிலைப்பாடுகளின் மீதுள்ள நியாயத்தைப் புரிந்து கொண்டுள்ளது. இதன்மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ள சர்வதேச அங்கீகாரத்தின் பெறுமானம் உயர்வடைந்துள்ளது.

ஏற்கனவே புதுடெல்லியும் வோசிங்டனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இராஜதந்திர அங்கீகாரத்தைக் கொடுத்திருந்த நிலையில் இப்போதைய தேர்தல் வெற்றி அவர்களை இன்னும் உயரத்துக்குக் கொண்டு சென்றுள்ளது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முன்னிறுத்தி சர்வதேச சமூகம் உரையாடும் நிலையை தோற்றுவித்துள்ளதுடன், இலங்கை அரசாங்கத்தையும் அவ்வாறே செயற்படும்படியும் அழுத்தங்களையும் கொடுக்கப்போகிறது.

தமிழ் மக்கள் சரியான நேரத்தில் சரியாக எடுத்த முடிவு, நான்கு ஆண்டுகால அரசியல் வெறுமையில் நிலையில் இருந்து தமிழர்கள் வெளிவரவும் உதவியாக இருக்கப்போகிறது.

இலங்கையில் ஏற்பட்ட அமைதியின்மைக்கு காரணம் பயங்கரவாதப் பிரச்சினைகள் அல்ல தமிழர்கள் எதிர்கொள்ளும் உரிமைப் பிரச்சினையே என்ற உண்மை, மீண்டும் ஒருமுறை ஜனநாயக ரீதியாக உலகிற்கு உணர்த்தப்பட்டுள்ளது.

இந்த உண்மையை உலகம் உணர்ந்து கொண்டு தமிழர் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்றை கண்டறிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழலில் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கத் துணை நிற்பது ஒன்றே, கடந்தகால அவப்பழிகளிலிருந்து உலகம் விடுபடுவதற்கு இருக்கின்ற ஒரே வழியாகும்.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வளப் பற்றாக்குறையால்

# இயங்காத நிலையில் உள்ள வட்டக்கச்சி பொதுச்சந்தை

**(கிளிநொச்சி)**

**கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலர் பிரிவில் உள்ள வட்டக்கச்சி பொதுச்சந்தை கடந்த 2012 ஆம் ஆண்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட போதிலும் வளப்பற்றாக்குறைகள் பல இங்கு உள்ளமையால் சந்தை செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியாத நிலை உள்ளதாக வியாபாரிகளும் நுகர்வோரும் விசனம் தெரிவித்துள்ளனர்.**

கடந்த 2011 ஆம் ஆண்டு இச் சந்தைக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கடந்த 2012 ஆம் ஆண்டு மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

ஆயினும் இச் சந்தை இயங்குவதற்கான அடிப்படை வசதிகள் எவையும் இங்கு அமைத்து கொடுபடாமையால் இச்சந்தை இக் கட்டடத்தில் செயற்பட முடியாத நிலையில் மக்கள் சந்தைக் கட்டடத்திற்கு அருகாமையில் தற்காலிக கொட்டகை ஒன்றை அமைத்து வியாபாரம் செய்து வருகின்றனர்.

எதிர்வரும் மழைகாலத்தில் இந்த தற்காலிகக் கொட்டகைகள் சந்தைச் செயற்பாடுகளுக்கு தாக்குப் பிடிக்க மாட்டா என சந்தை பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சந்தை கட்டடத்தை சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கப்படவில்லை. இதனால் கட்டாக்காலிகள் தற்காலிக சந்தைத் தொகுதியையும் புதிய சந்தை வளாகத்தையும் அசுத்தம் செய்து வருகின்றன.



புதிதான சந்தைக் கட்டடத்திற்கு கதவுகள் பொருத்தப்படவில்லை. மேலும் சந்தைக்கான தளபாட வசதியோ, மின்சார வசதியோ இங்கு ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லை.

இதனாலேயே புதிய சந்தை இயங்கமுடியாத நிலையில் உள்ளது.

எனவே உரிய தரப்பினர் விரைந்து அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி சந்தை செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு ஆவன செய்யுமாறு வியாபாரிகளும் நுகர்வோரும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம)




## பிரதீபா பிரபா விருது வழங்கும் நிகழ்வு

(மல்லாவி)

மஹிந்த சிந்தனை தேசிய புனர்வாழ்வு செயற்றிட்டத்துக்கு ஏற்ப எதிர்கால சவால்களை எதிர்கொள்ளக் கூடிய இலங்கையில் மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்கும் முகமாக கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்கும் ஆசிரியர்கள், அதிபர்களால் ஆற்றப்படும் அளவில்லா சேவையை கௌரவித்து இவ்வாண்டுக்குரிய பிரதீபா பிரபா விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதம மந்திரி தி.மு ஜயரத்ன தலைமையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வருகை தரவுள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கடைப் பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக கடித மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு தொடர்பான மேலதிக விபரங்களைபெறவிரும்புவோர் 011 278 4845 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்தில் மு/ஒலுமடு தமிழ் வித்தியாலய அதிபர் எஸ்.சர்வேஸ்வரன், மு/ஐயங்கன்குளம் அ.த.க. பாடசாலை அதிபர் ப.தர்மபூபதி ஆகியோர் நல்அதிபர் விருதுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். (ம-15)

## சுகாதார விழிப்புணர்வு செயலமர்வு

(சிவநகர்)

இளைஞர், யுவதிகளுக்கான சுகாதார விழிப்புணர்வு செயலமர்வு நாளை வியாழக்கிழமை காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை கரைச்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் கோபால பிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் கிளிநொச்சி சுகாதார வைத்திய பொறுப்பதிகாரி, குடும்ப நல மருத்துவ மாது ஆகியோர் இன்றைய இளைஞர் சமூகத்திற்கு தேவையான சுகாதார விழிப்புணர்வு கருத்துக்களை வழங்குவார்கள்.

கரைச்சி பிரதேச செயலக சிறுவர், மகளிர் அபிவிருத்தி பிரிவால் செய்யப்படும் இந் நிகழ்விற்குரிய நிதி அனுசரணையை சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு வழங்குகின்றது. (ம-254)

## கட்டாக்காலிகளால் சிரமம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டாக்காலிகள் அதிகமாக நடமாடுவதனால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால் போக்குவரத்துச் செய் வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதுடன் விபத்துக்களும் இடம்பெறலாம் என பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, இதற்கு தீர்வைப் பெற்றுத் தருமாறு மக்கள் சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-267)

## உணவு கையாள்தல் தொடர்பான கருத்தரங்கு

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட ஒட்டுசுட்டான் மாங்குளம், திருமுறிகண்டி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள உணவகங்களின் உரிமையாளர்களுக்கான உணவு கையாள்தலும் அவை தொடர்பான சட்ட நடவடிக்கையும் என்ற தலைப்பிலான கருத்தரங்கு முல்லை.மாவட்ட மருந்து பரிசோதகர் எஸ்.சிவகாந்தன் தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஒட்டுசுட்டான் பொது சுகாதார வைத்திய பணிமனையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாங்குளம், ஒட்டுசுட்டான் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.ஐங்கரன், மாவட்ட மருந்து பரிசோதகர் எஸ்.சிவகாந்தன் ஆகியோர் நுகர்வோருக்கு தரமான உணவுகள் வழங்குதல் தொடர்பாகவும் தவறும் போது எத்தகைய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் தெளிவுபடுத்தினார்.

இந் நிகழ்வில் நூற்றுக்கணக்கான உணவகங்களின் உரிமையாளர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-15)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 11 பேருக்கு 2 இலட்சம் ரூபா தண்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் பகுதிகளில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 11 பேருக்கு 2இலட்சம் ரூபா. தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் கசிப்பு உற்பத்திகளையும் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் அழித்து விடுமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.



மேலும் தண்டப்பணம் கட்டத் தவறும் பட்சத்தில் தனித்தனியாக 11 பேருக்கு 6 மாத கால சிறைத் தண்டனை வழங்கப்படும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)

## சிறுவர்,முதியோர்,மாற்றுவலுவுடையோர் தினப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

புதுக்குடியிருப்பு கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற சிறுவர்,முதியோர், மாற்றுவலுவுடையோர் தினப் போட்டி முடிவுகள் புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**பேச்சு போட்டி - சிறுவர் தினம்**

**ஆரம்பப் பிரிவு**

ஜே.ராகவி-மு/கோம்பாவில் விக்னேஸ்வரா,து.புருசோத்தமன்-மு/கோம்பாவில் விக்னேஸ்வராவி., பா.றொபின்சா- மு/நெத்தலியாறு த.வி.

**கனிஷ்ட பிரிவு**

இ.பிரசாந்தி- மு/விசுவமடு ம.வி., து.சோ.டேலக்சனா-மு/விசுவமடு, து. தூயவன்- மு/கைவேலி கணேசா வி.

**இடை நிலைப்பிரிவு**

[illegible] அ.த.க.பா., கே.டர்மிளா-மு/சுதந்திர புரம் அ.த.க.பா., ப.தனுசா-மு/விசுவமடு ம.வி.

**மேற் பிரிவு**

சு.தேவநிஷாந்தினி-மு/விசுவமடும.வி., அ.கௌசலாதேவி-மு/உடை யார் கட்டு ம.வி., இ.அனுஜா-மு/விசுவமடு ம.வி.

**பேச்சுப்போட்டி-முதியோர்தினம்**

**ஆரம்பப் பிரிவு**

ர.கஜானா-மு/உடையார்கட்டு அ.த.க.பா., அ.டோமினிசா-மு/கோம்பாவில் விக்னேஸ்வரா வி.,சி.ரிலக்சி-மு/கோம்பாவில் விக்னேஸ்வரா வி.

**கனிஷ்ட பிரிவு**

சி.லனோமி-மு/புதுக்குடியிருப்பு ம.க., யோ.கனிஸ்ரன்- மு/இரணைப் பாலைறோ.க.ம.வி.,ப.பகீர்த்தன்-மு/புதுக்குடியிருப்பு ம.க.

**இடை நிலைப்பிரிவு**

த.கிரிஸ்ரீனா-மு/பாரதிவி., பா.கதுர்சிகா-மு/சுதந்திர புரம்அ.த. க.பா.,உ. கயல்விழி-மு/தேவிபுரம் அ.த.க.பா.

**மேற்பிரிவு**

வி.துருபதன்-மு/உடையார் கட்டு ம.வி., ப.கோஜனனி- மு/புதுக்குடியிருப்பு ம.க., க.கீர்த்தனா- மு/புதுக்குடியிருப்பு ம.க.

**பேச்சுப்போட்டி-மாற்றுவலுவுடையோர்**

**ஆரம்பப்பிரிவு**

ப.பிரவீனா-மு/ஸ்ரீசுப்பிரமணிய வி., வி.நதிமகள்-மு/வள்ளிபுனம் க.உ.வி.,த.அபிநயா-மு/ஸ்ரீசுப்பிரமணிய வி.

**கனிஷ்ட பிரிவு**

தி.திருநிலவன்-மு/பாரதிவி., வி.கனிஸ்ரா-மு/வள்ளிபுனம் க.உ.வி., சு.சுதர்சனா- மு/சுதந்திரபுரம் அ.த. க.பா.

**இடைநிலைப் பிரிவு**

தி.திருமாறன்-மு/பாரதிவி.,பு.டென்சிகா-மு/வள்ளிபுனம் க.உ.வி.,த.வி. வினிதா-மு/பாரதி வி.

**மேற் பிரிவு**

இ.அகல்யா -மு/பாரதி வி., ப.யாழினி-மு/உடையார் கட்டு ம.வி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிரத பாதை அமைத்தலில் நிதி மோசடிகள் இடம்பெறுகின்றதா?

## திஸ்ஸ எம்.பி.கேள்வி

(கொழும்பு)

**ஓமந்தை முதல் பலாலி வரையான புகையிரதப் பாதையில் ஒரு கிலோ மீற்றர் வரையான பகுதியை அமைக்க 270 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. ஆனால், மாத்தறை முதல் பெலியத்தை வரையான புகையிரத பாதையில் ஒரு கிலோ மீற்றரை அமைப்பதற்கு 1,412 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றமை அதிர்ச்சியை ஏற்பத்தியுள்ளது என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

ஒரே காலப்பகுதியில் ஒரு கிலோ மீற்றர் புகையிரதப் பாதைக்காக செலவிடப்படும் நிதியில் இந்தளவு பெரிய வேறுபாடு காணப்பட முடியுமா? என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

நாட்டின் பொருளாதாரத்தின் கேந்திர நிலையங்களை சீனாவுக்கு அடகு வைக்கும் செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. குறிப்பாக புகையிரதப் பாதைகளை நிர்மாணிக்கும் செயற்பாடுகளை குறிப்பிட முடியும்.

ஓமந்தை முதல் பலாலி வரையில் அமைக்கப்படவுள்ள புகையிரதப் பாதை 91 கிலோ மீற்றர் நீளமாகும். அதில் ஒரு கிலோ மீற்றர் பாதையை அமைக்க 270 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது.

அதேபோன்று பலாலி முதல் காங்கேசன்துறை வரையில் புகையிரத பாதை அமைக்கப்படவுள்ளது. அதில் ஒரு கிலோ மீற்றருக்கு 343 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

ஆனால், மாத்தறை முதல் பெலியத்தை வரையில் 27 கிலோ மீற்றர் நீளமான புகையிரத பாதை அமைக்கப்படவுள்ளது. இந்த புகையிரத பாதையில் ஒரு கிலோ மீற்றரை



அமைப்பதற்கு ஆயிரத்து 412 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது.

இந்நிலையில் ஒரே காலப்பகுதியில் ஒரே அளவினதான இரு பாதைகளை அமைக்க இந்தளவு பெரிய நிதி வேறுபாட்டை காண முடியுமா? இது அசாதாரணமாக காணப்படுகின்றதல்லவா?

இது தொடர்பில் நாட்டுக்கு அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும். சீன நிறுவனம் ஒன்றுக்கே இது தொடர்பான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிகின்றது.

இந்நிலையில் இவ்வளவு அதிகரிப்பு இடம்பெறுவதற்கான காரணம் என்ன? இந்தக் கடன்களை எவ்வாறு திருப்பி செலுத்துவது? என்றார். (அ-2)

# 31 தமிழக மீனவர்கள் நேற்று விடுதலை

இலங்கை சிறைகளில் இருந்து நாகை, காரைக்காலைச் சேர்ந்த மீனவர்கள் 31 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த ஜூலை மாதம் 30 ஆம் திகதி கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகை மற்றும் காரைக்கால் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 31 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்து திருகோணமலை சிறையில் அடைத்தனர்.

அவர்களது காவலை நேற்றுவரை 7 ஆவது முறையாக நீட்டித்து திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

மீனவர்கள் 31 பேரின் நீதிமன்றக் காவல் நேற்றுடன் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். (அ-2)

# சிரமதானம்

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படுமென நூலகர் திருமதி ர.கோவர்த்தனன் அறிவித்துள்ளார். (அ-9-29)

# 2020 ஆம் ஆண்டில் முதியோர் தொகை இரட்டிப்பாகும்?

இலங்கையில் 2020 ஆம் ஆண்டாகும் போது முதியோர்களின் தொகை இரண்டு மடங்காவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டின் சனத் தொகையில், 10 வீதமானவர்கள் முதியோர்களாவர். 2030 ஆம் ஆண்டளவில் இத் தொகை 22 வீதமாக அதிகரிக்கும் என சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இதனால் நாட்டில் சுகாதாரப் பிரச்சினைகள் அதிகரிப்பதுடன் தொற்றாத நோய்களும் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் அவ்வமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இலங்கையில் முதற்தடவையாக முதியோர்களுக்கான தேசிய கொள்கை பிரகடனம் ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது. (அ-2)

# தேர்தல் கடமை கொடுப்பனவு

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் இரு ந்து வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கடமையாற்றிய ஆசிரியர்கள், உத்தியோகத்தர்களின் கடமைக் கொடுப்பனவு, பிரயாணப்படி கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் (அதிபரூடாக) வல யக் கல்வி அலுவலக யாழ். நிதிக் கிளையில் சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக் கல்வி அலுவலக கணக்காளர் ஆ.கிரிதரன் அறிவித்துள்ளார். (அ-7)

# கிளிநொச்சி- கொழும்பு ரயிலில் கொள்ளை

(கொழும்பு)

கிளிநொச்சியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரதத்தில் கொள்ளைச் சம்பமொன்று இடம்பெற்றுள்ளது.

பயணிகளுக்கு மயக்க மருந்து கொடுத்து பணம் மற்றும் பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

பொகவந்தலாவ பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு இளைஞர்களின் பொருட்களே இவ்வாறு கொள்ளை போயின.

ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான இக் கொள்ளைப் பொருட்களில் தங்க ஆபரணங்கள், கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பொருட்கள் அடங்குகின்றன. இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புகையிரதத்தில் நண்பர்களான இளைஞர்களே பணம், பொருட்களை அபகரித்துச் சென்றுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-2)

# அரசாங்கம் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தியே ஆக வேண்டும்

## ஐ.தே.க.வலியுறுத்து

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்களின் அமோகமான ஆதரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்துள் ளமையின் காரணமாக தேசிய பிரச்சினைத் தீர்வு உள்ளிட்ட எந்த விடயமானாலும் அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தனித்து பேச்சு நடத்தியே ஆக வேண்டும் என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சு நடத்தாவிடின் அது வடக்கு மக்களின் ஆணையைப் புறக்கணிப்ப தாகவே அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்குத்தேர்தலில்வெளிவந்துள்ளமுடிவுகள் குறித்து எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. பிரதேச ரீதியான அந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறுவது நியமானதாகும்.

, ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் வடக்குத் தமிழ் மக்கள் எம்முடனேயே இருப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# ஈழத்தமிழர்களது அரசியல் எதிர்காலம்

**Dr.சி.யமுனாநந்தா**

இலங்கைக்கு ஏற்பட வேண்டிய சர்வதேச நெருக்கடியையும் உள்நாட்டு நெருக்கடியையும் வடக்கு மாகாண சபைத் தேர்தல் தீர்த்து வைத்து உள்ளது.

தமிழ் மக்களது நம்பகமான அரசியல் விடிவை நோக்கி வட மாகாண சபை பயணிக்குமா என்பது ஐயத்துக்குரியதே.

அண்மையில் வட பகுதிக்கான புகையிரத பாதையை இந்திய அரசு முடித்து வைக்க அதில் சீனாவின் புகையிரதங்கள் பயணித்தன.

இலங்கையில் தமிழ் மற்றும் சிங்கள மக்களினதும் அரசியல் அபிலாஷைகளும் இப் புகையிரத பாதை போன்றதே. இவை எச்சந்தர்ப்பத்திலும் ஒன்றை ஒன்று சந்திக்காது.

இதில் பயணம் செய்யும் புகையிரதங்கள் போன்றதே. இலங்கையில் தலையீடு செய்யும் இந்தியாவும், சீனாவும், மேற்குலகுகளின் இந்த அடிப்படையை தமிழ் மக்கள் முதலில் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

அடுத்து இலங்கையில் அரசியல் நடத்துபவர்கள் பின்வரும் யாதேனும் ஒரு வகையினுள் அல்லது ஒரு சிலவற்றினுள் அடங்குவர். அவையாவன,

இலட்சிய அரசியல், உணர்வு அரசியல், நடைமுறை அணுகல் அரசியல், இணக்க அரசியல், சரணாகதி அரசியல், வர்த்தக அரசியல், காட்டிக் கொடுப்பு அரசியல், விளம்பர அரசியல், இராணுவ அரசியல், சர்வாதிகார அரசியல், குடும்ப அரசியல், பாதாள அரசியல் என்பவையாகும்.

இத்தகைய பன்மைத்துவ அரசியலின் ஊடே தமிழின் விடிவிற்கான அரசியலை செவ்வனே நடத்துவது என்பது சிக்கல் மிக்கதே. இதனையே வடமாகாண சபைத் தேர்தலின் பின்பான அரசியல் நகர்வுகளும் கட்டியம் கூறும்.

தமிழ் இனம் தொடர்ச்சியாக அழிக்கப்பட்ட, எமது வளங்கள் சுரண்டப்பட்ட, எமது பாரம்பரிய வாழ்விடங்கள் அபகரிக்கப்படும் சூழல்களில் எமது இனத்தின் உண்மையான நீதிக்காகப் போராடுவது இன்றியமையாத ஒன்றே.

இதனை மேற்கொள்வதற்கு எமது போராட்டம் 5 வகையாக ஒன்றித்தும் பிரிந்தும் அமைகின்றது. அவையாவன.

தமிழ் மக்களது அரசியல் உரிமைக்கான போராட்டம், தமிழ் அடையாளங்களைப் பேணுவதற்கான போராட்டம், தொழில்நுட்ப பொருளாதார மேன்பாட்டிற்கான போராட்டம், இராணுவ அடக்கு முறைக்கு எதிரான போராட்டம், மனித உரிமை மேன்பாட்டிற்கான போராட்டம் என்பவையாகும்.

இங்கு எமது போராட்டத்தை எதிர்ப்பவர்கள் போராட்டத்தினை ஆக்கபூர்வமாக எதிர்கொள்வது பற்றி சிந்திக்க வேண்டும்.

எமது அரசியல் சூழலியலில் சிங்கள மக்கள், சிங்கள அரசு, சிங்கள இராணுவம், இந்திய அரசு, வட இந்திய மாநிலங்கள், தமிழக மக்கள், தமிழக அரசு, பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா+ மேற்குலகு, தென்னாபிரிக்கா, ஐ.நா. ஆகியவையின் எதிரி வீதம், நட்பு வீதம் எவ்வாறு உள்ளது என்பதை ஆராய வேண்டும்.

தமிழ் மக்களது சமூக அரசியல் முன்னெடுப்புக்கள், தொழில்நுட்ப விருத்தி, பொருளாதார முயற்சி, கலாசார மீள்வலுவூட்டல், தொடர்பாடல் முறைமைகளின் பிரயோகம், மானிடவியற் கல்வியின் உள்ளார்ந்த உள்ளடக்கம் என்பனவற்றை மேம்படுத்தக் கூடியதாக அமைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பை ஓரங்கட்டிய ஆளுநர் தன்கையால் நியமனம் கொடுத்தார் கண்டீரோ!

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சருக்குரிய நியமனக் கடிதத்தை சி.வி.விக்னேஸ்வரனுக்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி நேற்று (01.10.2013) வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை என்றோ ஒருநாள் நடத்தியே ஆகவேண்டும் என்பது தெரிந்த விடயமாயினும் வடக்கின் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியே தனது கையால் முதலமைச்சருக்குரிய கடிதத்தை விக்னேஸ்வரனுக்குக் கையளிப்பார் என்று எவருமே எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

நடக்கும் என்பார் நடக்காது. நடக்காதென்பார் நடந்துவிடும் என்ற தத்துவத்தைத்தான்; பூச்சியத்திற்குள்ளே ஒரு இராச்சியத்தை ஆண்டுகொண்டு புரியாமலே இருக்கின்ற இறைவன் செய்கின்றான்.

சாதாரணமாக ஒரு பாடசாலையின் பரிசளிப்பு விழாவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டாலே பாடசாலை நிர்வாகத்திடம் விளக்கம், வியாக்கியானம் கேட்பது மட்டுமன்றி அந்த விழாவை ஏற்பாடு செய்த அதிபர் போதுமடா சாமி என்று சொல்லுமளவில் விசாரணைக்கு முகம் கொடுக்க வேண்டி வரும்.

பளையில் உள்ள ஒரு பிரபல்யமான பாடசாலை வெளியிட்ட மலரில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வாழ்த்துச் செய்தி இடம் பெற்றதால் புத்தக வெளியீடுபட்டபாடு அந்தப் பரமனுக்குத்தான் தெரியும்.

வடமாகாணத்தில் விழாக்கள் நடைபெற்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அழைத்து அவர்களுக்கும் விருந்தினர் ஆசனம் கொடுத்து ஒரு சுமுகமான சூழ்நிலையை ஆளுநரின் நிர்வாகம் ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அதை அந்தச் சீமான் செய்யவில்லை.



தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் கலந்துகொள்ளும் விழாக்களைப் புறக்கணிப்பது அல்லது அந்த விழாக்களைத் தடுப்பது என்ற அளவிலேயே வடக்கின் நிர்வாகம் இருந்துள்ளது. உண்மையில் இந்த நடைமுறைகளின் விளைவாகவே வடக்கு மாகாண சபைத் தேர்தலின் முடிவுகள் அமைந்திருந்தன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்தவர்கள் விழாக்களில் பங்கு பற்றக்கூடாது என்பதற்காக விழா ஒழுங்கமைப்புகளில் கடும்போக்கு பிரயோகிக்கப்பட்டது.

தப்பித்தவறி கூட்டமைப்பின் பிரதிநிதிகளை யாரேனும் பிரதம, சிறப்பு விருந்தினர்களாக அழைத்திருந்தால் அதற்காக சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் சந்தித்த பிரச்சினைகள் ஏராளம். இதுவே நிலைமையாக இருந்த வடக்கு மாகாண சபை நிர்வாகத்தில் 01.10.2013 அன்று



ஒரு பெரிய திருப்புமுனை அல்லது பெரும் மாற்றம் நடந்துள்ளது.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் வட பகுதியில் நடைபெறும் விழாக்களில் பங்கேற்பதை விரும்பாத ஆளுநர், தானே தனது கையால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு வடக்கின் முதலமைச்சருக்கான நியமனக் கடிதத்தை வழங்கியுள்ளார்.

உழவில் இல்லையென்றால் மறையிலாவது... என்ற பழமொழி இதைத்தான் கூறி நிற்கிறது.

ஐயா, நாங்கள்; கூட்டமைப்பின் பிரதிநிதிகளை எங்கள் விழாக்களுக்கு அழைத்தபோது நீங்கள் சீறிப் பாய்ந்து விளக்கம் கோரிய காலம் மறைந்துபோனதா? அல்லது மறந்துபோனதா?

நாங்கள் அவர்களை அழைத்தால் அதற்கு விளக்கம் என்றால், சி.வி.விக்னேஸ்வரனுக்கு முதலமைச்சர் பதவிக்கான கடிதத்தை நான் வழங்கமாட்டேன் என்று நீங்கள் கூறி உங்கள் பதவியை இராஜினாமாச் செய்திருக்கவேண்டுமல்லவா? அவ்வாறு செய்திருந்தால் நீங்கள் கேட்ட விளக்கங்கள் நியாயமானதாக இருந்திருக்கும். ஏன் நீங்கள் அவ்வாறு செய்யவில்லை.

ஓ...! பதவி என்றால்- பதவிக்கு ஆபத்து என்றால் சேர்ந்து போவது தான் உசிதம் என்ற முடிவை எடுப்பது புத்திசாலித்தனம் என்ற அடிப்படையில் கடிதம் வழங்கும் நிகழ்வு நடந்துள்ளது.

எதுவாயினும் வடக்கின் ஆளுநரான ஜீ.ஏ. சந்திரசிறி அவர்கள் வடக்கின் முதலமைச்சருக்கான நியமனக் கடிதத்தை வழங்கியமை, ஏதோவொரு வகையில் திருப்தியளிக்கின்றது.

## அரவணைத்துச் செல்லுங்கள்

இங்கு நாம் குறிப்பிடுகின்ற விபரங்கள் புதியவை அல்ல. உலக வரலாற்றில் இவைதான் நடந்துகொண்டிருக்கின்றன. காலமாற்றங்களே எங்களின் நடவடிக்கை தவறானவை என எங்களுக்குச் சுட்டிக்காட்டும். அவ்வாறு கால அசைவில் ஏற்படக்கூடிய சுட்டிக்காட்டல்கள் எங்களை நிச்சயம் வதைக்கும். இத்தகைய துன்பம் சாதாரணமானதல்ல. இவ்வாறானதொரு அபத்தச் சூழ்நிலையில் அகப்படாமல் நாம் விடுபடவேண்டுமாயின், அனைவர் மீதும் அன்பு செலுத்துதல், அரவணைத்துச் செல்லுதல், மற்றவர்களின் கருத்துக்கும் இடங்கொடுத்தல் என்ற விடயங்களில் கவனம் செலுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

## ...தின்னப்பழம் கொண்டு தருவான் பாதி தின்கின்ற வேளையில்...

....தின்னப் பழம் கொண்டு தருவான்
பாதி தின்கின்ற போதினில் தட்டிப் பறிப்பான்....
என்னப்பன் என்னையன் என்று சொன்னால்.....

என்ற பாடல் வரிகள் மேற்கூறிய விடயத்தைத்தான் உணர்த்துகின்றன.

இறைவன் நமக்குத் தந்து பார்க்கின்றான். அதற்கு நாம் உரிய கௌரவம் கொடுக்காமல் அதர்மத்தோடு நடந்தால் தந்தவன் நாம் பாதி தின்கின்ற நேரத்தில் தட்டிப்பறித்து விடுவான். அதற்குப் பின் என்னப்பன் என்னையன் என்பதால் என்ன பயன். ஆக, கிடைத்ததை நல்லமுறையில் பயன்படுத்துங்கள். பழி தீர்த்தல் என்ற பேச்சுக்கே இடம் கொடாதீர்கள். நேர்மை, நீதி , அன்பு என்ற உயரிய பண்புகளோடு உங் களின் பணியை ஆற்றினால் தின்னப் பழம் தந்தவன் மகிழ்வான். பாதியில் தட்டிப் பறியான். என்னப் பன் என்னையன் என்று கெஞ்சி மன்றாடும் தேவையும் இருக்காது. எனவே,இதனை அனைத்துத் தரப்பினரும் உணர்ந்து கொண்டு செயற்பட்டால் நிச்சயம் உய்வும் உயர்வும் மனநிம்மதியும் தானாகவே கிடைக்கும். இது உறுதி.

- விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரம் வழங்கப்படாமையால் இருளில் மூழ்கும் கிராமங்கள்

(மல்லாவி)

**முல்லை. மாவட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாங்குளம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கல்குவாரி, நீதிபுரம், துணுக்காய் வீதி, பழையகொலனி, புதிய கொலனி, கிழவன்குளம், பனிக்கன்குளம் ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழுங்கப்படாமையால் இக் கிராமங்கள் இருளில் மூழ்கி காணப்படுகின்றன.**



போரினால் இடம்பெயர்ந்து கடந்த 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மேற்குறித்த கிராமங்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

இங்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் மின்சாரத்தினூடாக செயற்படுத்தப்படும் அனைத்து வேலைகளும் இங்கு ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுகின்றன.

குறிப்பாக இக்கிராமங்களில் பல நூற்றுக்குமதிகமான மாணவர்கள் கல்வி பயின்று வருகின்ற நிலையில் மின்சாரம் இன்மை இவர்களையும் பெரிதும் பாதிக்கின்றது.

இவர்கள் குப்பி விளக்குகளையே தமது இரவு கற்றலுக்கு பயன்படுத்தி வருகின்றனர். இவ்விளக்கு பாவனை தீ விபத்துக்களையும் ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

மேலும் இக்கிராம மக்கள் தமக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை என பல தடவைகள் உரிய தரப்பினரிடம் முறையிட்டும் எதுவித மான நடவடிக்கைகளும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை.

எனவே, உரிய தரப்பினர் இக்கிராமங்களுக்கு மின்சாரத்தை வழங்கி ஒளியூட்ட வேண்டுமென அப்பகுதி மக்கள் மீண்டும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-15)

# தொழில்நுட்ப கல்லூரி மீது குண்டுத் தாக்குதல்

(பூந்தோட்டம்)

வவுனியா நகர சபையால் இம் முறையும் வாசிப்பு மாதம் அனுஷ்டிக்கப்படவுள்ளது என நகர சபையின் செயலாளர் கே.சத்தியசீலன் தெரிவித்தார்.

ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியில் இருந்து நேற்றிலிருந்து எதிர்வரும் 31 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள வாசிப்பு மாதத்தில் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக தெரிவித்துள்ள அவர் பாடசாலை மாணவர்கள், வாசகர்கள் மத்தியில் பல்வேறு போட்டிகளும் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை பார்வையற்றோர் பகுதி ஆரம்பக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியை அனுஷ்டிக்கும் முகமாக பார்வையற்றோருக்கான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன அவர்களுக்கான கிரிக்கெட் போட்டிகளும் இடம்பெறவுள்ளதாக தெரிவித்தார். (ம-266)

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி பல செயற்பாடுகள் முன்னெடுப்பு

பூநகரி பிரதேச சபை நிர்வாகத் தினர் உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி அந்த வாரத்தில்பல செயற்பாடு களை மேற்கொள் வதற்கான நட வடிக்கைகளை எடுத்துள்ளனர்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி காலை தொடக்கம் மாலை வரை முக்கொம்பன் கிராமத்தில் ஆயுர் வேத நடமாடும் சிகிச்சையும் மறுநாள் 22 ஆம் திகதி பணியாளர் கள், உறுப்பினர்கள், பொறுப்பாளர் கள் இணைந்து கடந்த கால சபைக்கு வரவேண்டிய நிலுவைகள் அறவிடலும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி கிராம ரீதியான சிரமதா னப் பணிகளும் மறுநாள் 24 ஆம் திகதி பூநகரி பிரதேச சனசமூக நிலையங்களுக்கான வலுவூட்டல் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி சுற்றாடலில் மரங்களை நடுதல் நிகழ்வில் ஆயுர்வேத மூலிகை மரங்களும் பயன் தரு மரங்களும் அலுவலக சுற்றாடலிலும் சந்தை தொகுதியிலும் பொது இடங்களிலும் நாட்டப்படவுள்ளன.

இறுதி நாளான 26 ஆம் திகதி பாடசாலை மட்டத்தில் கல்வி, நூலக அபிவிருத்தி சம்பந்தமான நூலக விழிப்புணர்வை ஏற்படுத்தும் முக மாக பிரதேச சபை உறுப்பினர் களும் பணியாளர்களும் பாடசாலை களை தரிசித்து செயற்பாட்டில் ஈடு படவுள்ளனர். (ம-84)

# விதைநெல் தட்டுப்பாட்டால் விவசாயிகள் திண்டாட்டம்

# நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் காலபோக விதைப்பை மேற்கொள்வதற்கு நல்லஇன நெல்வகைகள் கிடைக்காது விவசாயிகள் சிரமமடைகின்றனர்.

கிளிநொச்சியில் உள்ள விவசாய விதை நெல் பண்ணையில் 406 மற்றும் சிவப்பு இன நெல் வகைகள் காலியாகி விட்டதென தெரிவிப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சிறு போகத்தில் செய்யப்பட்ட நெல் இனங்களும் விதை நெல்லுக்கு பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் கடந்த கால போகத்தின் போது பெரு மழையினால் நல்ல விளைச்சலை பெற முடியாத நிலையில் விதை நெல்லுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவ்விதை நெல் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக துறைசார்ந்தவர்கள் உடனடியாக உரிய ஒழுங்குகளை மேற்கொண்டு தரமான விதை நெல்லை பெற்றுக் கொள்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-254)

# மீன்களை குளத்துடன் ஏலத்தில் விட முடிவு

(பூநகரி)

நன்னீர் மீன்வளத்தை ஊக்குவிக்கும் பொருட்டு கடந்த ஆண்டில் பிறிட்டிக் அக்ஷன் நிறுவனத்தினால் பூநகரியில் உள்ள பெரிய குளங்களான பெரிய தம்பிராய் குளம், எல்லைக்கால் குளம், வண்ணான் குளம் ஆகிய வற்றில் விடப்பட்ட 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட மீன் குஞ்சுகள் முதிர்ச்சியடைந்து விற்பனைக்கு தயாராகவுள்ளதாக கொல்ல குறிச்சி கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

முதிர்ச்சியடைந்த மீன்கள் ஒவ்வொன்றும் 2 கிலோ தொடக்கம் 2 1/2 கிலோ வரை நிறையை கொண்டதாகவும் இம் மீன்களில் இருந்து தயாரிக்கப்படும் கருவாட்டுக்கு வெளிமாவட்டங்களில் கிராக்கி உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இம் மீன்கள் குளத்தோடு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதால் ஏலத்தில் மொத்தமாக மீனைப் பெற இருப்பவர்கள் கொல்லை குறிச்சி கமக்கார அமைப்பு பூநகரி என்னும் முகவரியில் தொடர்பு கொண்டு விபரங்களை பெற்றுக் கொள்ளலாம் என கமக்கார அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

இதேபோன்று பிறிட்டிக் அக்ஷன் நிறுவனத்தினரால் பல குளங்களில் மீன் குஞ்சுகள் விடப்பட்டு வளர்க்கப்பட்டு வருவதாகவும் தெரிவிககப்படுகின்றது. (ம-84)

# வவுனியா நகரசபையால் வாசிப்பு மாதம் அனுஷ்டிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா நகரசபையால் இம்முறையும் வாசிப்பு மாதம் அனுஷ்டிக்கப்படவுள்ளது என நகரசபையின் செயலாளர் கே.சத்தியசீலன் தெரிவித்தார்.

நேற்றிலிருந்து எதிர்வரும் 31 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ள வாசிப்பு மாதத்தில் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக தெரிவித்துள்ள அவர் பாடசாலை மாணவர்கள் வாசகர்கள் மத்தியில் பல்வேறு போட்டிகளும் இடம்பெறவுள் ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை பார்வையற்றோர் பகுதி ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியை அனுஷ்டிக்கும் முகமாக பார்வையற்றோருக்கான நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதுடன் அவர்களுக்கான கிரிக்கெட் போட்டிகளும் இடம் பெற வுள்ளதாக தெரிவித்தார். (ம-266)




# மன்னாரில் கஞ்சா மீட்பு

(பூந்தோட்டம்)

தலைமன்னாரில் இருந்து சூட்சுமமான முறையில் வெளியே கொண்டு செல்லப்பட்ட 2 கிலோ நிறையுடைய கஞ்சாவை தலைமன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

தலைமன்னாரில் இருந்து பேருந்தில் கஞ்சா கொண்டு செல்லப்படுவதாக கிடைத்த தகவலையடுத்தே பொலிஸார் நடத்திய சோதனையில் கருவாட்டினுள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் 2 கிலோ நிறையுடைய கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் கணவன், மனைவியை தலைமன்னார் பொலிஸார் கைது செய்துள்ளதாக வும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-266)



வவுனியா கள்ளிக்குளத்தில் பொலிஸாரின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற சிறுவர்தின நிகழ்வின் போது...
(படங்கள்:-பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை யோக்கியனாக மாற்றிக் கொள்வதில் ஒரு நன்மை ஏற்படும். அதாவது உலகில் ஒரு அயோக்கியன் குறைகிறான்.

– ஓர் அறிஞர்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## பலாப்பழப் பண்பாடும் அரசியல் பண்பாடும்

பலாப்பழப் பண்பாடு என்பது பற்றி யாரும் அறிந்திருக்க மாட்டார்கள். அப்படியொரு பண்பாடு இருந்தால்தானே! அறிவதற்கென்று நீங்கள் கேட்டால் அதுவும் நியாயமானதே.

ஆனாலும் பலாப்பழப் பண்பாடு என்ற ஒரு விடயத்தை நாம் முன்மொழிவதற்குக் காரணம் உண்டு.

அதாவது பலாப்பழம் எவ்வளவுதான் சுவையாக இருந்தாலும்–முக்கனிகளில் ஒன்றாக பெருமை பெற்றாலும் பலாப்பால் என்பது இழுவலுக்கும் ஒட்டுதலுக்கும் உரியதுதான்.

பலாப்பழத்தை வெட்டிச் சாப்பிடுதல் என்றவுடனேயே எண்ணெய் தேவை என்ற உணர்வு நமக்குள் எழுகை பெற்றுவிடுகிறது.

பலாப்பழத்தின் சுவையை நுகரும் அதே நேரம் பலாப்பாலில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக, எண்ணெய் பூசும் வழமை எங்களுக்குப் பழக்கப்பட்டதே.

பலாப்பழத்தை வெட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் கத்திக்கும் பலாச்சுளைகளை இழுத்து எடுக்கும் கைக்கும் எண்ணெய் தேவைப்படும்.

இங்கு பலாப்பழத்தை வெட்டி அதை சாப்பிட்டபின் எண்ணெய் பூசி, பலாப்பாலில் இருந்து விடுபடுகின்ற முறைமை அறிவின்பாற்பட்டது.

இதுதவிர, பலாப்பழத்தை வெட்டுவதற்கு முன்னதாக கத்திக்கும் கைக்கும் எண்ணெய் பூசுவது நுண்ணறிவின் பாற்பட்டது.

ஆக, பலாப்பாலில் இருந்து விடுபடுவதற்காக, பலாப்பழத்தை வெட்டுவதற்கு முன்னரே கத்திக்கும் கைக்கும் எண்ணெய் பூசினால் அது நுண்ணறிவு.

பலாப்புழத்தை வெட்டி அதனை உண்டபின் எண்ணெய் பூசிக் கொள்வது அறிவு.

ஆக, நுண்ணறிவு, அறிவு என்ற இரு விடயங்களும் ஒரே கருமத்தை செய்வதாயினும் செய்கின்ற நேரம் அல்லது காலம் மாறுபட்டது. இந்த மாறுபாடுகளுக்குள் பெறப்படும் நன்மையில் வித்தியாசம் உண்டு.

அதாவது, பலாப்பழத்தை வெட்டவும் சாப்பிடவும் முன்னதாக கத்திக்கும் கரத்திற்கும் எண்ணெய் பூசுவது, குறைந்தளவு எண்ணெய்யுடன் பலாப்பால் எங்கள் கைகளில், கத்தியில் ஒட்டிக் கொள்ளாமலே தடுத்துக் கொள்ளலாம்.

ஆனால், பலாப்பழத்தை வெட்டி உண்டபின் கத்திக்கும் கைக்கும் எண்ணெய் பூசுவது, எண்ணெய்யுக்கும் சேதம்; பலாப்பாலின் ஒட்டல்களில் இருந்து மீள்வதற்காக உரஞ்சுவதும் நேர விரயம்.

எனவே அறிவு, நுண்ணறிவு என்ற இரு வித்தியாசப்பட்ட அணுகுமுறை ஊடாகவே பலாப்பாலில் இருந்து எங்களை காப்பாற்றிக் கொள்கிறோம்.

இதிலிருந்து தாங்கள் சொல்லும் முடிபுதான் என்ன? என்று நீங்கள் கேட்பதை நாம் உணராதவர்கள் அல்ல.

ஆம்! பலாப்பழம் என்றால் பலாப்பால் தொல்லை இருக்கவே செய்யும். இதுதான் பலாப்பழப் பண்பாடு.

பலாப்பால் ஒட்டிக் கொள்ளும், தொற்றிக் கொள்ளும் என்பதற்காக, பலாக்கனியின் சுளையை குறை கூறுவதோ அல்லது அதை நுகராமல் விடுவதோ புத்திசாலித்தனமல்ல.

பலாப்பழப் பண்பாடு போலவே அரசியலிலும் ஊழல், மோசடி, ஏமாற்றல், தலையீடு, செல்வாக்கு, பக்கச்சார்பு என்ற பண்பாடுகள் உண்டு. இந்தப் பண்பாடுகள் ஒட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காக–கைகளை சுத்தமாக வைத்திருப்பதற்காக நம் அரசியல்வாதிகள் பொருத்தமான எண்ணெய்யை முதலில் பூசிக் கொள்ள வேண்டும். இல்லையேல் பலாப்பழப் பண்பாடு போல அரசியல் பண்பாடும் தொற்றிக் கொள்ளவே செய்யும்.

# அமைச்சுப் பதவியூடாகத்தான் சேவை செய்ய வேண்டியதில்லை!

## அனந்தி சசிதரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்களுக்குச் சேவை செய்தவதற்கு அமைச்சுப் பதவிகள்தான் தேவை என்பதில்லை. எத்தகையதொரு எதிர்பார்ப்புடன் நீங்கள் எனக்கு வாக்குகளை அளித்தீர்களோ அவ்வழித்தடத்திலிருந்தும் நான் இம்மியளவும் விலக மாட்டேன் என உறுதி கூறுகின்றேன் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

இந்நிலையில் ஒரு சில இணைய ஊடகங்களில் அனந்தி சசிதரன் ஆகிய நான் வட மாகாண சபையின் அமைச்சுப் பதவிகளுக்காக அடிபடுவதாக திரிவுபடுத்தப்பட்ட செய்திகள் சில உள்நோக்கத்துடன் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்படுகின்றது எனவும் அவர் கூறினார்.

அத்தகைய திரிவுபடுத்தப்பட்ட செய்திகளை முற்றாக நிராகரிப்பதோடு எமது மக்களுக்கு சேவையாற்ற மாகாண சபை அமைச்சுப் பதவிகள் தான் தேவையானது எனவும் நான் ஒரு பொழுதும் கருதவில்லை.

யுத்தத்தின் வடுக்களை தாங்கி நிற்கும் எமது மக்களுக்கு சேவை செய்தவற்கும் குரல் கொடுப்பதற்கும் மாகாண சபை உறுப்பினர் பதவி என்பது கூட தடைக்கல்லாக இருந்தால் அதனையும் தாண்டிச் செல்ல நான் தயாராகவே இருக்கின்றேன்.

தேர்தல் காலப்பகுதியில் என் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அச்சுறுத்தல்கள் மற்றும் கொலை முயற்சிகள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பு பொறிமுறையொன்றை உறுதி செய்து உதவுமாறு எனது கட்சித் தலைமையிடம் கேட்டுள்ளேன்.

அமைச்சுப் பதவிகள் போன்றவற்றிற்காக முரண்பட்டுக் கொள்வது எந்த மக்கள் உன்னதமான இலக்கிற்காக எமக்கு மிகப் பெரும் வெற்றியைப் பெற்றுத் தந்தார்களோ அந்த எமது உறவுகளையே சலித்து போக வைத்து எம்மை அம்மக்களிடமிருந்து அந்நியப்படுத்திவிடும்.

எனவே மக்களுக்கு சேவை செய்ய அமைச்சுப் பதவிகள்தான் வேண்டுமென்பதில்லை என்பதனை அனைவருக்கும் மீண்டும் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். நடந்து முடிந்த தேர்தல் கால பகுதிகளில் பெண் என்ற வகையிலும் யுத்தத்தின் வடுக்களை தாங்கி நிற்கும் தாயொருத்தி என்ற வகையிலும் எனது வெற்றிக்காக தோள் கொடுத்த மகளிர் அமைப்புக்கள் அனைத்திற்கும் மீண்டும் நன்றிகள்.

பெண்ணொருவரை அமைச்சர் ஆக்குவதன் ஊடாக தமக்காக குரல் கொடுக்கும் சக்தி ஒன்று தொடர்பில் அவர்கள் கொண்டுள்ள அக்கறையினை நான் நன்றியுடன் புரிந்து கொள்கின்றேன். அந்த வகையினிலேயே கூட்டமைப்பு தலைமையிடம் எனக்காக அமைச்சு ஒன்றை வழங்கியுதவுமாறு அவர்கள் கோரியிருக்கலாம் என நான் நம்புகின்றேன்.

பதவிகள் மற்றும் கதிரைக் கனவுகளைத் தாண்டி எனது மக்களிற்கான சேவையென்பதையே இலட்சியமாகக் கொண்டுள்ளேன் என்பதை மீண்டுமொரு முறை நான் உறுதிப்படுத்திக் கொள்கின்றேன் என்றுள்ளது. (எ–11)

# ஜனநாயக மக்கள் முன்னணிக்காக தமிழ்க் கூட்டமைப்பு பிரசாரம் செய்யும்

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு உட்பட்ட மேல்மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்கு தமது முழுமையான ஆதரவை வழங்கும் என பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன், ஊடகச் செயலாளர் பாஸ்கரா உட்பட பலரின் ஆதரவுடன் வடக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் கூட்டமைப்பு பிரசார பணிகளை மேற்கொண்டிருந்தது.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் நாம் மலையகம் சார் பிரதிநிதியை நியமிக்காத சந்தர்ப்பத்திலும் எமக்காக தலைவர் மனோ கணேசன் அவர்களும், ஊடகச் செயலாளர் பாஸ்கரா அவர்களும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

எங்கள் பெருவெற்றிக்கு அவர்கள் பெரும் பங்காற்றியவர்கள். நடைபெறவிருக்கும் கொழும்பு உட்பட்ட மேல் மாகாண சபைத் தேர்தலில் தனித்து களம் இறங்கவுள்ள ஜனநாயக மக்கள் முன்னணிக்கு முழுமையான ஆதரவை அளிப்பது எமது தார்மீக கடமையாகும்.

தமிழ் மக்கள் அழிக்கப்படும் காலங்களில் எல்லாம் கொழும்பில் இருந்து எமக்காக குரல் கொடுத்த தலைவர் மனோ கணேசனுக்கும் ஜனநாயக மக்கள் முன்னணிக்கும் கொழும்பு உட்பட்ட மேல் மாகாண தமிழ் மக்கள் தமது முழுமையான ஆதரவை நிச்சயமாக வழங்கவார்கள் என்பதில் எமக்கு பூரண நம்பிக்கையுண்டு.

மேலும் தமது முற்றுமுழுதான ஆதரவு ஜனநாயக மக்கள் முன்னணிக்கு என்றும் உண்டு எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார். (எ–11)

## மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

திருமூலநாயனார் குருபூசைவிழாவை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் உடுவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாட்சாலை மாணவர்களுக்கான இந்துசமய பொது அறிவுப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நான்கு பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டிகளில் பாலர் பிரிவில் 2,3 ஆம் தர மாணவர்களும் கீழ்ப் பிரிவில் 4,5 ஆம் தர மாணவர்களும் மத்திய பிரிவில் 6,7,8 ஆம் தர மாணவர்களும் மேற்பிரிவில் 9,10,11 ஆம் தர மாணவர்களும் பங்குகொள்ள முடியும்.

இப்போட்டிப் பரீட்சைக்கு அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி போட்டிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னதாக திருமதி தர்ப்பணா சுதர்சன், அபிவிருத்தி உத்தியோகத்தர்(இந்து கலாசாரம்), பிரதேச செயலகம், உடுவில் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற 0773361309 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## எப்படிச் சொன்னாலும் பலனுண்டு



❖ பணக்காரன் வீட்டு வேலைக்காரி அந்த வீட்டின் வேலைகளை செய்தாலும், அவளுடைய சிந்தனையெல்லாம் தன் வீட்டின் மீதே இருக்கும். எஜமானனின் குழந்தைகளை எல்லாம் தன் குழந்தையாகப் பாவித்தாலும், அக்குழந்தைகள் தனக்கு சொந்தமானவர்கள் அல்ல என்பதை அவள் உள்மனம் நன்கு அறிந்திருக்கும். அதுபோல, உலக வாழ்வில் ஈடுபட்டாலும் இறைவனே நமக்கு சொந்தமானவன் என்னும் உள்ள உறுதியோடு வாழ வேண்டும்.

❖ மனம் பால் போன்றது. அதனைத் தண்ணீராகிய உலகத்துடன் கலந்தால இரண்டும் உடனே கலந்து விடும். முதலில் பாலைக் காய்ச்சி, உறை விட்டு தயிராக்கினால் கடைந்து விடலாம். கடைய கடைய தயிரிலிருந்து வெண்ணெய் உண்டாகும். வெண்ணெயை நீரில் வைத்தால் அது நீருடன் கலப்பதில்லை. மிதக்க தொடங்கி விடும். அதுபோல், பக்தியாகிய ஞானத்தை கடைந்தெடுத்தால் உலகமாகிய நீரில் மிதக்கலாம். உலகத்துடன் கலக்காமல் தனித்து நிற்கும் வலிமை உண்டாகும்.

❖ தெரிந்து சொன்னாலும், தெரியாமல் சொன்னாலும், தன்னறிவில் சொன்னாலும், அறியாமல் சொன்னாலும், எந்த நிலையில் சொன்னாலும் பகவான் நாமத்தைச் சொன்னதற்கான பலன் ஒருவனுக்கு நிச்சயம் உண்டு. அப்படி சொல்லும்போது மலையளவு பாவங்கள் குவிந்திருந்தாலும், பஞ்சுப்பொதி மீதிட்ட நெருப்பினை போல் எரிந்து சாம்பலாகி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவிலே சம்பியன்ஸ் லீக் ஆட்டங்கள் விறுவிறுப்பாகவும் பல சுவாரஸ்யங்களுடனும் நடைபெற்றுவருகின்றன. அந்தவகையிலே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற டைடன்ஸ் - டிரினிடாட் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தின்போது மைதானத்திற்கு வெளியே வாத்திய கலைஞர்கள் ரசிகர்களை மகிழ்விப்பதை படத்தில் காணலாம்.

# மழை குறுக்கீடு; ஆட்டம் இரத்து

ஆமதாபாதில் தொடர்ந்த மழையினால் 'பி' பிரிவில் இடம்பிடித்துள்ள பிரிஸ்பேன், ஹைதராபாத் அணிகளுக்கிடையே திங்கட்கிழமை இரவு நடைபெற இருந்த ஆட்டம் கைவிடப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகள் வழங்கப்பட்டன.

தற்போது ஹைதராபாத் அணி 6 புள்ளிகளுடன் 4ஆம் இடத்தில் உள்ளது. எந்த ஆட்டத்திலும் வெற்றி பெறாத பிரிஸ்பேன் அணி 2 புள்ளிகளுடன் கடைசி இடத்தைப் பிடித்தது.

இப்பிரிவில் சென்னை அணி ஏற்கனவே, அரையிறுதிக்கு முன்னேறி விட்டது. தற்போது, டைட்டன்ஸ் மற்றும் டிரினிடாட் அணிகள் 8 புள்ளிகளைப் பெற்றுள்ளது. ரன் ரேட் அடிப்படையில் டிரினிடாட் அணி முன்னிலையில் உள்ளது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் பலம் வாய்ந்த சென்னை அணியுடன் டிரினிடாட் குறைவான ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவினாலும் அந்த அணி அரையிறுதிக்கு முன்னேறி விடும். அதேசமயம், அதிக ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தால், டைட்டன்ஸ் அணிக்கு அரையிறுதி வாய்ப்பு சென்று விடும்.

# டெனிஸ் பரிசுத்தொகை;
## அன்டி முர்ரே - வீனஸ் வில்லியம்ஸ் மோதல்

விம்பிள்டன், அமெரிக்க திறந்தசுற்று போன்ற கிராண்ட் ஸ்லாம் டெனிஸ் போட்டிகளில் ஆண்கள் மற்றும் மகளிர் ஒற்றையர் பிரிவுகளில் சம்பியன் பட்டம் வெல்லும் வீரர், வீராங்கனைக்கு சம அளவிலான ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது. இதற்கு முன்னணி வீரர்களிடையே அதிருப்தி நிலவுகிறது. இது குறித்து இங்கிலாந்து வீரர் ஆண்டி முர்ரே கூறுகையில், 'ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நாங்கள் ஒவ்வொரு போட்டியிலும் 5 செட் வரை கடுமையாகப் போராட வேண்டியுள்ளது.

ஆனால், மகளிர் பிரிவில் அதிபட்சம் 3 செட் தான் விளையாடுகிறார்கள். பரிசுத்தொகை மட்டும் சரி சமமாக வேண்டும் என்று கேட்டு வாங்கிக் கொள்கிறார்கள். இதில் நியாயம் இல்லை. மகளிர் ஒற்றையர் ஆட்டங்களும் 5 செட்கள் நடைபெற வேணடும். வீராங்கனைகள் இதற்குத் தயாராக இருந்தால் மட்டுமே சரி சமமான பரிசுத்தொகை கேட்கலாம். இல்லாவிட்டால் எங்களுக்கும் 3 செட் ஆக்கவேண்டும்' என்று சவால் விடுத்திருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்காவின் நட்சத்திர வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் இதற்கு பதிலடி கொடுத்திருக்கிறார். 'தற்போது மகளிர் பிரிவில் 3 செட் ஆட்டங்களே நடந்துவருகின்றன. அதை 5 செட்களாக மாற்றினாலும் நாங்கள் விளையாட தயாராகவே இருக்கிறோம். குறிப்பாக, கிராண்ட் ஸ்லாம் டெனிஸ் போட்டிகளில் இந்த மாற்றம் செய்யப்பட்டால் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை' என்கிறார் வீனஸ். மகளிர் டெனிஸ் சங்க தலைவர் ஸ்டேசி அலஸ்டரும், வீராங்கனைகள் இந்த சவாலுக்கு தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

# தினேஸ் கார்த்திக்குக்கு இடம் கிடைக்காதது ஆச்சரியமளிக்கிறது
## - தேர்வுக் குழுத் தலைவர்



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் 3 ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியில் இருந்து தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் நீக்கப்பட்டார். விக்கெட் காப்பாளரான அவர் யுவராஜ் சிங்குக்காக கழற்றி விடப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் இந்திய அணியில் இருந்து தினேஷ் கார்த்திக் நீக்கப்பட்டது ஆச்சரியமானது என்று முன்னாள் விக்கெட் காப்பாளரும் முன்னாள் தேர்வு குழு தலைவருமான கிரண் மோரே கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில்,

துடுப்பாட்டம் என்ற முறையில் தினேஷ் கார்த்திக் இடம்பெறுவதற்கு தகுதியானவர். சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் அவரது துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தது. என்ன காரணத்துக்காக அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டார் என்று தெரியவில்லை.

துடுப்பாட்டம் என்ற முறையில் அவர் அணியில் இருக்க வேண்டும் என்பதே எனது கருத்தாகும். உள்ளூர் போட்டியில் மாற்று விக்கெட் காப்பாளர் தேவையில்லை என்று தேர்வு குழுவினர் கருதி இருக்கலாம்.

இளம் வீரர் ஜெய்தேவ் உன்கட் தேர்வு மிக சரியானதே. அவர் கடந்த சில மாதங்களாக சிறப்பாக செயற்பட்டு வருகிறார்.

ஷேவாக், கம்பீர் ஆகியோரது எதிர்காலம் நிச்சயமாக முடிந்துவிடவில்லை. அதற்கு உதாரணம் யுவராஜ் சிங். அவரது வழியில் ஷேவாக்கும், கம்பீரும் மீண்டும் இடம் பெறுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. இவ்வாறு கிரண் மோரே கூறியுள்ளார்.

# மரதன் போட்டியில் கிப்சாங் சாதனை



பேர்லின் மரதன் போட்டியில் கென்ய வீரர வில்சன் கிப்சாங் புதிய சாதனை படைத்தார்.

ஜேர்மன் தலைநகர் பேர்லினில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மரதன் போட்டியில் கிப்சாங், 2 மணி நேரம் 3 நிமிடம் 23 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்தார்.

இது, கென்ய வீரர் பாட்ரிக் மகாவின் (2:03:38) சாதனையை விட 15 விநாடிகள் குறைவானதாகும். இதனால், பாட்ரிக் மகாவின் சாதனையை முறியடித்து மரதன் போட்டியில் புதிய சாதனை படைத்தார் வில்சன் கிப்சாங்.

இந்த வெற்றியின்மூலம் மரதன் போட்டியில் வில்சன் பெற்ற வெற்றிகளின் எண்ணிக்கை 7ஆக உயர்ந்தது.

கடந்த ஆண்டு நடைபெற்ற லண்டன் ஒலிம்பிக் போட்டியில் வில்சன் வெண்கலம் வென்றது குறிப்பிடத்தக்கது. இதுதான் அவர் பங்கேற்ற முதல் ஒலிம்பிக் போட்டியாகும்.

கென்யாவின் ஆதிக்கம்: பேர்லின் மரதனில் கிப்சாங்கைத் தொடர்ந்து வந்த எலியுட் கிப்சோஜ் (2:04:05), ஜியோஃப்ரே கிப்சாங் (2:06:26) ஆகியோர் முறையே 2 மற்றும் 3ஆம் இடங்களைப் பிடித்தனர். இவர்களும் கென்யாவைச சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



ஜேர்மன் தலைநகர் பேர்லினில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மரதன் போட்டியில் கலந்துகொள்வதற்காக தயாராகும் வீரர்களில் ஒரு தொகுதியினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லுங்கியில் கலக்கும் டோனி அன் கோ!



நீல நிறத்திலான லுங்கி, மஞ்சள் கலர் சட்டை மற்றும் பச்சை கலர் கண்ணாடி என அதிரடியாக தோற்றமளித்துள்ளார் டோனி. இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் டோனி உட்பட சென்னை சூப்பர் கிங்ஸ் வீரர்கள் அனைவருமே படு ஸ்டைலாக வந்துள்ளனர்.

நல்ல நீல நிறத்திலான லுங்கி, மஞ்சள் கலர் சட்டை மற்றும் பச்சை கலர் கண்ணாடி என அசத்தலாக இருந்தார் டோனி. இவருடன், அவரது மனைவி சாக்ஷியும் காணப்பட்டார். சுரேஷ் ரெய்னாவோ மஞ்சள் கலரில் டி சர்ட்டும், கீழே கட்டம் போட்ட பைஜாமாவும் அணிந்து படு ஜோராக இருந்தார்.

இதேபோன்றே அல்பி மார்க்கலும் சுற்றி திரிந்தார். ஆனால் அஸ்வினோ லுங்கி அணியாமல், பைஜாமாவில் வித்தியாசமாக காணப்பட்டார். இவருடன் துணைக்கு மைக்கேல் ஹஸ்ஸியும் இருந்தார்.

ரவீந்திர ஜடேஜாவுக்குத்தான் லுங்கி செம பொருத்தம். முறுக்கி விட்ட மீசையும், உருட்டுப் பார்வையும், சிவப்பு, கருப்பு, வெள்ளை கட்டம் போட்ட லுங்கியுமாக பயங்கர ரெரராக காட்சியளித்தார்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியினர் ஏன் இந்த புதுக் கோலத்தில் காணப்பட்டனர் என்று குழப்பம் வரலாம்.

அதாவது, பேன்சி பேண்ட்ஸ் வாரம் என்று ஒன்றை கொண்டாடினர் சென்னை அணியினர். அதன் பொருட்டே இப்படி டிரஸ் சேஞ்ச்.





## அரசு – கூட்...

தெரிவுக்குழுவில் பங்கேற்பது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்பட உள்ளதாக கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

எனினும் பேச்சுவார்த்தைகளின் போது தேசிய பாதுகாப்பு குறித்து இணக்கப்பாடுகள் எட்டப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது என அப்பத்திரிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கிற்கு பொலிஸ அதிகாரங்கள் வழங்கப்பட்டால், அது பொலிஸ் திணைக்களத்தை பிளவடையச் செய்யும் என பொலிஸமா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார். (எ-11)

## இன்னும்...

கொண்டு ஆளுநர் அலுவலகத்தில் இருந்து வெளியேறியபோது முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், நியமனப் பத்திரம் ஆளுநரிடமிருந்து கிடைக்கப் பெற்றது. அடுத்த கட்டமாக சத்தியப் பிரமாணம் நான் எடுக்க வேண்டியுள்ளது.

அது யார் முன்னிலையில் எப்பொழுது என்பது பற்றி தீர்மானிக்க வேண்டும் அதுவரைக்கும் இருந்து பார்ப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# சென்னையின் கட்டுப்பாடு குருநாத்திடம் ரகசியத்தை அவிழ்த்துவிட்டார் ஹஸி

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை நிர்வகித்தவர் யார் என்ற விவரத்தை வெளியிட்டுள்ளார் மைக்கேல் ஹஸி.

ஐபிஎல் சூதாட்ட வழக்கில் பிசிசிஐயின் தலைவர் சீனிவாசனின் மருமகனும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் சி.ஓவுமான குருநாத் மெய்யப்பன் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து குருநாத் சென்னை அணியின் சி.ஓ இல்லை, கிரிக்கெட்டில் ஈடுபாடு உடையவர் மட்டுமே என சீனிவாசன் தெரிவித்து வந்தார்.

இந்த விவகாரத்தால் தனது பதவியை ராஜினாமா செய்த சீனிவாசன், மீண்டும் மூன்றாவது முறையாக தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில் மைக்கேல் ஹஸி, அன்டர்நீத் தி சதர்ன் கிராஸ் என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.



இதில் சென்னை அணியை நிரவகித்தவர் குருநாத் மெய்யப்பன் தான், அவருக்கு நிர்வாக அதிகாரத்தை வழங்கியது அவரது மாமனார் சீனிவாசன்தான் என தெரிவித்துள்ளார்.

இவர் சூதாட்டத்தில் பெட் கட்டும் போது சென்னை அணியின் இரகசியங்களை, ஆட்ட யுக்திகளை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# படையினரை எவ்வாறு வெளியேற்றப் போகிறீர்கள்

## விமல் கேள்வி

வடக்கில் உள்ள இலங்கை படையினரையும், ஆளுநரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எந்த அரசியல் அதிகாரத்தின் கீழ் வெளியேற்றப் போகின்றார்கள்? அவ்வாறு வெளியேற்ற இவர்களுக்கு என்ன உரிமை இருக்கின்றதென தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச கேள்வியெழுப்பியுள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்குகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பிய அமைச்சர் விமல் வீரவன்ச மேலும் கூறியதாவது:

"வடக்கு மாகாண சபையின் ஆளுநரையும் வடக்கில் உள்ள படையினரையும் மிக விரைவில் வெளியேற்றிக் காட்டுவோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்த செய்திகள் தமிழ்த் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. இதனைச் செயற்படுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு என்ன உரிமை இருக்கின்றது? இதனை அவர்கள் எந்தச் சட்டத்தின் கீழ் செயற்படுத்தப் போகின்றார்கள்.

இன்று எமது நாடு ஒரு பாரிய அபிவிருத்தி யுகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. அதனைத தீர்க்கமான முறையில் தற்போதைய அரசு செயற்படுத்திக் கொண்டிருக்கின்றது. இருண்ட யுகத்தில் இருந்த இந்த நாட்டை ஒரு அகன்ற வெளிச்ச யுகத்திற்குக் கொண்டு செல்ல அரசு பல செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகின்றது.

தமிழ்ப் பத்திரிகையொன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எனக்கு சவால் விடுத்துள்ளனர். வடக்கில் உள்ள படையினரையும, ஆளுநரையும் வெளியேற்றிக் காட்டுவார்களாம். அதனை நான் மிக விரைவில் தெரிந்து கொள்வேன் எனத் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மிதிவெடிகளும் கண்ணி வெடிகளும் புதைக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்ட ஒரு பிரதேசம். ஆனால் தற்போது அந்தப் பிரதேசத்தில் குண்டுகள், கண்ணி வெடிகள் இல்லை. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு அத்திபாரமிட்டப்பட்டுள்ளது. வடக்கில் வாழும் மக்களுக்கு முழுக்க முழுக்க சகல அபிவிருத்திகளும் கிடைக்குதென நான் சொல்லவில்லை. யுத்தம் முடிவடைந்த பின் இந்த நாட்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு அதனை மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

வடக்கில் உள்ள படையினரையும், ஆளுநரையும் வெளியேற்றுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எந்த அரசியல் அதிகாரத்தின் கீழ் நிறைவேற்றப் போகின்றார்கள் என்பதை அவர்களிடம் கேட்க விரும்புகின்றேன். மனித உரிமை பரிசோதனை என்ற திட்டத்தின் கீழ் நவநீதம் பிள்ளை ஊடாகவா இதனை நிறைவேற்றப் போகின்றார்கள் ?

இந்த நாட்டை இருள் சூழ்ந்த நிலைக்கு கொண்டு சென்ற யுத்தத்தை வென்று வெளிச்சத்திற்கு கொண்டு வருவதற்கு உதவியதற்காக படையினரை வெளிநாட்டுச் சக்திகள் ஊடாக சோதனை செய்யப் போகின்றார்களா? யுத்த காலத்தில் குண்டு வெடிப்புகளாலும் மனித குண்டுகளாலும் மனிதப் படுகொலைகள் இடம் பெற்றன. 30 வருட கால யுத்தத்தினால் அப்பாவி தமிழ் மக்கள் உயிர்களைக் காவு கொடுத்தனர். அதே போன்று வட கிழக்கில் உள்ள எல்லைக் கிராமங்கள் மற்றும் பள்ளி வாசல்களில் வைத்து முஸ்லிம்களும் கொலை செய்யப்பட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 80 சதவீதமான வாக்குகளைப் பெறுவதற்கும் மகிந்த ராஜபக்ஷவே வழிவகுத்துக் கொடுத்தவர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)


# மரண அறிவித்தல்



உடுப்பிட்டி ஆதியாமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## சீனியர் விசுவலிங்கம்

அவர்கள் 01.10.2013 அன்று காலமாகி விட்டார். அன்னார் அமரர்களான பரிமளத்தின் கணவரும் சீனியர் மாணிக்கம் தம்பதிகளின் மூத்த புதல்வரும், இராமலிங்கம் (ஆசிரியர்) , சண்முகம் (ஆசிரியர்), விஜயன், உருத்திரன் ஆகியோரின் சகோதரரும், இராஜேஸ்வரன் (கிளி), புவனேந்திரம் (டானியல்), அரியமலர் (அமரர்), குலேந்திரன் (ராஜன்), அற்புதமலர், ரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுந்தாபாய், சந்திராவதி, உதயராஜா, பத்மசெல்வி (டிங்கா), அமலா ஆகியோரின் அன்பு மாமனும், சலோமி, மனாசே டானியல், மனோஜினி, ஜெம்சித் றெகான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் : குடும்பத்தினர்
தொலைபேசி : 0776943178

(4068)


## பொதுநலவாயப் பாடல் வெளியானது

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை முன்னிட்டு எம்.ரி.வி, எம்.பி.சி ஊடக வலையமைப்பு தயாரித்த உத்தியோகபூர்வப் பாடலுக்கு பாரியளவில் வரவேற்பு கிடைத்துள்ளது.

இந்தப் பாடலின் மூன்றாம் கட்டம் நேற்று காலை 10 மணிக்கு ஒளி, ஒலிபரப்பு செய்யப்பட்டது.

இந்தப் பாடலில் மூன்றாம் கட்டத்திற்கு சிறுவர்கள் உள்ளடக்கப்பட்டு அவர்களால் இசைக்கப்பட்ட பாடல் நேற்று எம்.ரி.வி, எம்.பி.சி ஊடக வலையமைப்பின் அனைத்து அலை வரிசைகளின் ஊடாக ஒளி, ஒலிபரப்பு செய்யப்பட்டது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சருக்கு நிய...

சுமார் 25 வருடங்களுக்கு பின்னர் முதன்முறையாக இடம்பெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட்டு ஒரு இலட்சத்து 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்ற க.வி.விக்னேஸ்வரன் கூட்டமைப்பின் முதலமைச்சராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியை அவரது வாசஸ்தலத்தில் சென்று சந்தித்து கலந்துரையாடிய முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் முதலமைச்சருக்கான நியமனக் கடிதத்தை வழங்குதல், ஏனைய உறுப்பினர்கள பதவிப் பிரமாணம் பெறுதல் தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் வைத்து முதலமைச்சருக்கான நியமனக்கடிதத்தை ஆளுநர் வழங்கினார்.

ஆளுநர் அலுவலகத்திற்கு நேற்று முற்பகல் 10 மணியளவில் சென்ற முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கைலாகு கொடுத்து வரவேற்றார்.

பின்னர் ஆளுநரின் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட முதலமைச்சர் ஆளுநருடன் கலந்துரையாடினார்.

இதன்போது வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் உடனிருந்தனர்.

அதனையடுத்து உத்தியோகபூர்வமாக முதலமைச்சருக்கான நியமனக் கடிதத்தை ஆளுநர் கையொப்பம் இட்டு வழங்கினார்.

இதனையடுத்து முதலமைச்சரும் கையொப்பமிட்டு தனது நியமனக் கடிதத்தை பொறுப்பேற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

# நாட்டின் அபிவிருத்...

பரீட்சை எழுதவுள்ள மாணவர்கள் என்னைவிட அதிக புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்டத்திற்கும் வடக்கு மாகாணத்திற்கும் பெருமை தேடிக் கொடுக்க வேண்டும்.

ஆசிரியர்களின் சொல்கேட்டு ஒழுக்கத்துடன் மாணவர்கள் கல்வி கற்க வேண்டும். கிராம புறப்பாடசாலையாக இருந்தாலும் படித்த பாடங்களை மீள வீட்டில் சென்று கற்று ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் உரிய பயிற்சிகளை மேற்கொண்டால் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெறமுடியும். நானும் அவ்வாறே கல்வி கற்றேன்.

மேலும் எதிர்காலத்தில் சிறந்த பொறியியலாளராக வரவேண்டும் என்று விரும்புகிறேன்.

அதற்குக் காரணம் இந்த நாடு தற்போது அபிவிருத்தியடைந்து வருகிறது. இதனை மேலும் அதிகரிக்கச செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன்.

எதிர்காலத்தில் தனது கல்விச் செயற்பாடுகள் இதைப்போன்று அமையும் எனவும் தனது நம்பிக்கையினை வெளியிட்டார் மாணவன் தனுராஜ். (எ-6)

# பொதுநலவாய மாநா...

உண்ணாவிரத போராட்டம் நடத்த தியாகுவிற்கு அனுமதி வழங்க பொலிஸார் மறுத்தனர்.

இதனையடுத்து அவர் சென்னை உயர் நீதிமன்றத்தை நாடினார்.

அவரது மனுவை நேற்று விசாரித்த உயர் நீதிமன்றம், கடற்கரையில் உண்ணாவிரதம் இருக்க அனுமதி கிடையாது என்ற அரசின் நிலையை நீதிமன்றம் ஏற்றுக்கொள்வதாகவும், அதே சமயம் வள்ளுவர் கோட்டத்தில் உண்ணாவிரத போராட்டம் நடத்த நேற்று மாலைக்குள் தியாகுவிற்கு பொலிஸார்அனுமதி வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

அதே சமயம் உண்ணாவிரதம் இருக்கும் நாள், எத்தனை மணி நேரம் மற்றும் எவ்வளவு பிரமுகர்கள் வருவார்கள் என்பது உள்ளிட்ட விவரங்களை தியாகு, நீதிமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும் நீதிபதி தனது உத்தரவில் கூறியுள்ளார். (எ-11)

# இன்று...

ஆசனங்கள் யாருக்கு வழங்குவது என்பது தொடர்பான சர்சசை முடிபுக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் அமைச்சர்கள் தெரிவு இழுபறி நிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (எ-6)



Green card lottery

2015 அமரிக்க லொத்தர் விண்ணப்பம் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

திருமுருகன் கொம் நெற்

271A, கே.கே.எஸ் வீதி, யாழ்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
18, பிரதான வீதி, நெல்லியடி.
30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.



யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

தேசிய பாடசாலை

தரம் 6 அனுமதி - 2014

மேற்படி கல்லூரியின் 2014 - கல்வி ஆண்டுக்கான தரம் 6 வகுப்பு (தமிழ்/ஆங்கில மொழிமூலம்) அனுமதிக்கு ஆண், பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.பாடசாலை அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப இறுதித் திகதி : 2013.10.15

(சி-4976) - அதிபர் -


# மகிந்த கல்லூரி மாண...

இலங்கை ரீதியில் 2-ம் இடததைப் பெற்றுள்ளனர்.

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலய மாணவன் பர மானந்தம் தனு ராஜ் 194 புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் முதலிடத்தினையும் அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழி மூலம் தோற்றியோரில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

இதேவேளை, சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் முகுந்தன் மிதுலன் 193 புள்ளிகளைப்பெற்று 2-ம் இடத்தினையும் 191 புள்ளிகள் பெற்று அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி உதயகுமார் கம்ஷாயினி 3-ம் இடத்தினையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவி அருளீசன் அருவி மற்றும் மட்டக்களப்பு வின்சன் மகளிர் தேசிய பாடசாலை மாணவி கவிலாஷனா ஆகியோர் தலா 193 புள்ளிகளைப் பெற்று வவுனியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் முதலிடத்தினைப் பெற்றுள்ளனர்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயமாணவன்ரணேஸ் ஆதித்தன் மற்றும் மட்டு. புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலய மாணவி சதாசிவம் தனுசிக்கா ஆகியோர் தலா 191 புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை, மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவன் நடராஜா அருன் 185 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை, முல்லைத்தீவு விசுவமடு விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை மாணவி இராமக்கிளி விதுர்சியா 191 புள்ளிகளைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். (எ-6,11)


உணவு, இருப்பிடம், ரிக்கெட் இலவசம்

டென்மார்க்கில் படிக்க 2 இலட்சம் வரை உழைக்க, 6 மாதத்திற்கு ஒரு தடவை இலவசமாக ஊர் வந்து போகலாம்.
2 வருட விசா



கொலண்டில் (நெதர்லாந்தில்) படிக்க 2 இலட்சம் வரை உழைக்க.
2 வருட விசா

மலேசியாவில் படிக்க மாதம் 65000/- வரை உழைக்க வெறும் 3 இலட்சம் போதும்

அமெரிக்காவில் படிக்க 3 இலட்சம் உழைக்க 5 வருட, 10 வருட விசா

கனடாவிற்கு விசிட் விசா பெற சட்ட ஆலோசனை.

இத்தாலி சட்ட ரீதியாகச் செல்ல அரிய வாய்ப்பு (நிபந்தனைகளுக்கமைவாக)

IELTS இல்லாமலே நியூசிலாந்து Student Visa பெறலாம்.

7 நாட்களும் காலை 8.30 - பி.ப 6.00 மணிவரை

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 0212219016, 0215689090

(C-4970)



CA
CAB I CAB II
AAT

யாழ்ப்பாணத்தில் நவீன மயப்படுத்தப்பட்ட வகுப்பறைகளில் குறைந்த செலவில் வகுப்புக்கள் ஆரம்பம்.

05-10-2013

பேராசிரியர் கே. தேவராஜாவின் ஆலோசனையுடனும் கொழும்பின் மூத்த விரிவுரையாளர் A.M. Roy Fernandoவின் வழிநடத்தலில் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் வகுப்புகள் நடாத்தப்பட உள்ளன.

Mind Vision
Technology CAMPUS
மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
077 933 9353
(C-4973)



O/L தகுதியுடன் விமான துறையில் உங்கள் கனவினை அடைய

EASA Part 147 Approved Training Centre

Air Craft Maintenance Engineering

Conducting EASA Part 66 License Examination - Category B 1

Placement Training 80 days in Germany / 90 Days in Malaysia

புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

STUDENTS CAN CHOOSE TO PERFORM THEIR FINAL YEAR IN GERMANY

LANKA PACIFIC AVIATION ACADEMY & ACS Education Consultancy

114,Brown Road, Jaffna, Sri Lanaka
202/60,Royal Pearl Garden, Hendala, Wattala, Sri Lanka.
Tel:77 301 7147 / 77 007 1835 / 77 9123 826
www.facebook.com/AcsEducationConsultancy , www.lpaa.lk, www.easaexams.net

(4066)



DHL EXPRESS வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

விரைவு! பாதுகாப்பு!! நம்பகத்தன்மை

11kg மேற்பட்ட பொதிகளுக்கு விஷேட கட்டணச் சலுகை.

சகல நாடுகளுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்

மீண்டும் மிகக் குறைந்த கட்டணத்தில் மிகத் துரித சேவை

3 தொடக்கம் 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்

திருமுருகன் கொம் நெற்

இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
(ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
(கனகபுரம் பஸ்தரிப்பிடத்தில் இருந்து 100 மீற்றர் இடைவெளியில்)

TCN Express
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6

DHL EXPRESS

இல. 5, திருநகர் வீதி, கிளிநொச்சியில் இருந்து தற்பொழுது இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது (திருமுருகன் கொம் நெற் இன் சகல சேவைகளும் புதிய முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது)

வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

MMBL Money Master

46, Adiyapathum Veethy, Thirunalvely.

(C-4975)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தா.னத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.